பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை 05.11.2024 கதிர் 363

### இனி இது ரகசியம் அல்ல!

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதைப் போல ரணில் விக்கிரமசிங்க செய்துவிட்டுப் போனகாரியங்களால்தமிழ்அரசியல் கட்சிகளுக்குள் இன்னும் ☞ 2

## மக்கள் ஒருமித்து வாக்களித்தால் வன்னியில் வீட்டுக்கு 5 இடங்கள்

### வேட்பாளர் ரவிகரனின் தெரிவிப்பு

தமிழ் மக்கள் இன்னும் வீட்டுச் சின்னத்தை மறக்கவில்லை. மக்களிடம் நாம் சென்று நேரடியாகப் பேசும்போது வீட்டுச் சின்னம் என்ற நிலையில் மாறாதிருப்பது எமக்கு மகிழ்வைத் தருகின்றது. ஆகவே வீட்டுச்சின்னத்திற்கு தமிழர்கள் அனைவரும் ஒருமித்து வாக்களித்தால் வன்னித் தேர்தல் தொகுதியில் வீட்டுச் சின்னத்தில் ஐந்து ஆசனங்களைப் பெறமுடியும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னிமாவட்ட வேட்பாளர் ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பரப்புரையில் ரவிகரன் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:

தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அரசமைப்பின் பதின்மூன்றாம் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. போர் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னர் பல வெளிநாடுகளின் அழுத்தங்களால் அரசமைப்பின் பதின்மூன்றாம் ☞ 2



மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பான புதிய யோசனையை நவம்பர் 8க்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு

## மின் கட்டணத்தை மேலும் குறைப்பதற்குப் பரிந்துரை

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட யோசனையில் கட்டண திருத்த விலை சூத்திரத்துடன் இணங்குவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக ☞ 2

## மின்சார சபையினை தனியார் மயப்படுத்தும் திட்டம் இடைநிறுத்தம்

அரசுக்கு சொந்தமான மின்சாரத் துறையை தனியார்மயப்படுத்தும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் வலுசக்தி துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியாளர் ஏ.டி.கே. பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒரு புதிய மறுமலர்ச்சி சகாப்தத்தின் விடியலில் மக்களை மையமாகக் ☞ 2

## பாடசாலைச் சீருடைகளை 100% இலவசமாக தந்துதவ சீனா தயார்

அடுத்த வருடம் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அனைத்து சீருடைகளையும் நன்கொடையாக வழங்க சீன அரசு தயாராக இருப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

கம்பஹா - கெப்பெட்டிபொல தேசிய பாடசாலையில் இடம்பெற்ற குறைந்த வருமானம் கொண்ட ☞ 8

# இரவில் கிராமங்களுக்குள் புகுந்து தாய்மாரை மிரட்டி வாக்கு வேட்டை

## மட்டக்களப்பில் இத்தகைய அவலம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

மட்டக்களப்பில் கடந்த காலத்தில் ஆயுதங்களுடன் மக்களை அச்சுறுத்தி வாக்குகளைப் பெற்ற ஒட்டுக்குழுக்கள் தற்போது இரவில் குழுக்களாக கிராமங்களுக்குள் புகுந்து தாய்மார்களை மிரட்டி வாக்குகளை பெறுவதற் முயற்சிக்கின்றனர் எனவே தமிழ் மக்கள் இந்த தேர்தலை கவனமாக கையாளவேண்டும். அதேவேளை தேர்தலை ஜனநாயக முறையில் நடத்த தேர்தல் திணைக்களம், ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்புக் குழு அமைப்புக்கள், பவ்ரல் அமைப்பு செயற்பட வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

மட்டக்களப்பில் தேர்தல் பரப்புரை சூடுபிடித்துள்ள நிலையில் 2009க்கு பின்னர் இருந்த காலங்களைவிட மிக இறுக்கமான தேர்தலைக் கையாளுகின்றனர் கடந்த காலங்களில் ஒட்டுக்குழுக்கள் தங்களது ஆயுதங்களைப் பயன்படுத்தி அச்சுறுத்தலைச் செய்து பாராளுமன்றம் முதலமைச்சர் பதவிகளையும் ஏனைய சலுகைகளையும் பெற்றுக் ☞ 2

## கடவுச்சீட்டுப் பெற இனி ஒன்லைன் பதிவு முறை

கடவுச்சீட்டு வரிசைக்கு தீர்வாக கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள நிகழ்நிலையில் (Online) திகதி மற்றும் நேரத்தைப் பதிவு செய்யும் முறைமையை அமுல்படுத்த தீர்மானித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, ஒன்லைன் ஊடாக கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளமுடியும் என குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் பி.எம்.டி. நிலூஷா பாலசூரிய தெரிவித்தார்.

இந்த இணையவழி முறைமை இன்று முதல் அமுலுக்கு வரும் எனவும், ஏற்கனவே வரிசைகளில் நின்றவர்களுக்கு ☞ 8

## மக்கள் அதிகாரத்தைத் தன்னிடம் தந்தால் 2 வருடங்களில் தீர்வு தருவாராம் டக்ளஸ்

சோறா சுதந்திரமா என்ற கேள்வி வந்தபோது சோறு இருந்த காரணத்தால் சுதந்திரம் என்று வீதிக்கு இறங்கியதனால் சோறும் இல்லை சுதந்திரமும் இல்லை என்று நிலைக்கு வந்துள்ளோம். இப்போது மக்கள் அதிகாரத்தை என்னிடம் தந்தால் அடுத்த 2 வருடங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டமுடியும் என்று நம்புகின்றேன்.

இவ்வாறு ஈபிடிபி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய நல்லிணக்கத்தை நடைமுறைப் படுத்தவதற்காக இம்முறை பல மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருந்தோம். குறிப்பாக வடக்கு கிழக்கிலுள்ள மாவட்டங்களுடன் களுத்துறை, கம்பகா கொழும்பு, புத்தளம் போன்ற மாவட்டங்களிலும் போட்டியிட முடிவுசெய்திருந்தோம். ☞ 2



## செல்வம் மற்றும் ஆனந்தனுக்கு சுயேச்சை எமில்காந்தன் சவால்

வன்னி மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் இல்லை என்று சுமந்திரனுக்கு சுட்டிக்காட்டுவதாக தெரிவித்துள்ள சுயேச்சைக் குழு இலக்கம் 7 இன் முதன்மைவேட்பாளர் எமில்காந்தன், ரணிலிடம் பணம் பெற்ற விவகாரம் தொடர்பான ஆதாரங்களை வெளியிட செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் தயாரா என்று சவால் விடுத்துள்ளார்.

வவுனியாவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியின் நிலைப்பாடுகளின் பிரகாரம் பிற அரசியல் கட்சிகள் மற்றும் தரப்பினர் தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பதில்லை. இதனை ஆரம்பத்திலிருந்து நாம் தெரிவித்து வந்திருக்கின்றோம். கடந்த காலங்களில் அவ்வாறு ☞ 8

## புனித ஹஜ் பயணங்களிலும் ஆளும்தரப்பு பார்வை படியும்

முஸ்லிம்களின் ஐந்து கடமைகளில் ஹஜ் யாத்திரையும் ஒன்று. அந்தப் பொறுப்பை நிறைவேற்றும்போது, அந்த வாய்ப்புகள் சலுகைவிலையில் மக்களுக்கு கிடைக்க வேண்டும். மேலும், கொழும்பிலும் கிராமப் புறங்களிலும் வாழும் முஸ்லிம் சமூகத்தினரும் புனித ஹஜ் யாத்திரை நடவடிக்கைகளில் பங்குபற்றும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டுமெனவும் இது தொடர்பில் ஆளும் தரப்பின் கவனம் செலுத்தப்படும் எனவும் புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் ஹஜ் யாத்திரையை ஏற்பாடு செய்யும் முகவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. அங்கு அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

ஹஜ் யாத்திரையை ஏற்பாடு செய்யும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் ☞ 8

## பெற்றோல் விலை குறித்து கூட்டுத்தாபனம் விளக்கம்

எரிபொருள் விநியோகம் தொடர்பில் ஏனைய நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகள் காரணமாக விலை திருத்தம் தொடர்பில் சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில், இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அதன் தலைவர் டி.ஜே.ராஜகருணா இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

விலைச் சூத்திரம் இல்லாமல் ☞ 8

## லொஹானின் மனைவியும் நவம்பர் 7 வரை மறியலில்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவியும் நவம்பர் 7 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் லொஹான் உடல்நலக் குறைவு காரணமாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உட்கட்சிமோதல்கள்தீவிரமடைந்துள்ளன. ஒரு புறத்தில் சாராயக் கடைகளுக்கான அனுமதி வழங்கிய விவகாரம் தேர்தல் மேடைகளிலும் தூள்பறத்துகின்றது. மறுபுறத்தில் ரணில் கொடுத்த 38 கோடிரூபாய்கள் ரெலோவிற்குள் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

ரணில் ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவாக இருப்பார்கள் என்று கருதியவர்களுக்கும் அபிவிருத்திக்காக நிதி வழங்கினார். அதாவது, முன்னைய ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியைப் போன்று இந்த நிதியும் வழங்கப்பட்டது. இவர்களால் தெரிவு செய்யப்பட்ட திட்டங்களுக்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டது.

அப்படி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதனுக்கு 38 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த விவகாரம்தான் தேர்தலுக்கு மத்தியிலும் கட்சிக்குள் பெரும் பூதாகாரமாகக்கிளம்பியுள்ளது. இந்தநிதியைப் பெற்ற செல்வம் அடைக்கலநாதன், அதில் 8 கோடி ரூபாயை அவரது வலது கையும் கட்சியின் பொருளாளரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான சுரேன் -குருசாமிக்கு ஒதுக்கினார்.

அவர் அந்த நிதியிலிருந்து மீனவர்களுக்கு வாழ்வாதார உதவியாக வலைகள் கொடுப்பது மீன்பிடி உபகரணங்கள் கொடுப்பது என்று வகையில் பல்வேறு திட்டங்களையும் செயற்படுத்தி தனக்கான தேர்தல் முதலீடாக அந்த நிதியை மாற்றிக்கொண்டார். இந்தத் தேர்தல் காலத்திலும்கூட அவரின் நிதியின் கீழான உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் உண்டு. வாழ்வாதாரத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தடையில்லை என்று தேர்தல் திணைக்களம் வழங்கிய அனுமதியின் அடிப்படையில் அவை தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் செல்வம் தனக்கு ரணிலால் வழங்கப்பட்ட 38 கோடியில் சுரேனுக்கு மட்டும் எப்படி, எதற்காக 8 கோடி கொடுத்தார் என்பதுதான் இப்போது கட்சிக்குள் பெரும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. ரெலோவில் செல்வத்திற்கு மட்டுமே அந்த நிதி கிடைத்தது. அந்தக் கட்சியின் மற்றொரு முன்னாள் நாடளா-மன்ற உறுப்பினரான வினோவிற்குக்கூட அது கிடைக்கவில்லை. அப்படியிருக்க, வடக்கு கிழக்கில் உள்ள மற்றைய மாவட்டங்களுக்குள் அதில் ஒரு சிறு தொகையைக்கூட ஒதுக்காமல் யாழ்ப்பாணத்திற்கு மட்டும் 8 கோடியை ஒதுக்கி அதுவும் சுரேனின் திட்டங்களிற்கு மட்டும் அந்த நிதியைக் கொடுத்தது ஏன் என்பதுதான் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடு.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களுக்கு இதிலிருந்து எந்த நிதியும் கிடைக்கவில்லை. கட்சித் தலைவராக இருந்துகொண்டு இப்படி செல்வம் ஓரவஞ்சனையாக எப்படி நடக்க முடியும் என்று கட்சிக்குள் ஹென்றி மகேந்திரன், விந்தன், பிரசன்னா என்று பலரும் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள். இதனால் கட்சி இரண்டுபட்டுள்ளதால் ரெலோவின் பொதுத் தேர்தல் பரப்புரைகளும் ஆட்டம் கண்டுள்ளன. ரெலோ உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் செல்வத்திற்காகவோ அவரது ஆதரவாளர் அள்ளக்கைகளுக்காகவோ தேர்தலில் போட்டியிடமாட்டோம் என்று பிடிவாதமாக நிற்கின்றனர்.

...........................

தேர்தல் களத்தில் ஆங்காங்கு சினிமாப் பாணியிலும் சில சம்பவங்கள் நடக்கின்றன. கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இப்போது ஆதரவாளர்கள், தொண்டர்கள், விசுவாசிகள் என்று எவரும் இல்லாத காரணத்தால் கூலிக்கு ஆள்பிடித்துத்தான் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுகிறார்கள். சந்தைகள், சந்திகள், பொது இடங்களுக்குச் சென்று துண்டறிக்கைகள் வழங்குவது முதற்கொண்டு, சுவரொட்டி ஒட்டுவது, வீடுவீடாகச் சென்று துண்டறிக்கைகள் கொடுப்பது என்று எல்லாவற்றுக்கும் நாள் சம்பளம் 3 ரூபாய், சாப்பாடு, இரவில் தாராள சாராயம் என்றுதான் பணிக்கு ஆள்கள் அமர்த்தப்படுகின்றார்கள்.

இப்படி கிளிநொச்சியில் ஒரு கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவர் தனக்குப் பரப்புரை செய்யவென்று ஒருவானையும் ஒழுங்குபடுத்தி ஆட்களையும் ஒழுங்குபடுத்தி அவர்களுக்குச் சம்பளமும் பேசி எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைக்க. மறுநாள் அந்த வான் தேர்தல் தொழிலாளர்களுடன் புறப்படத் தயாராக இருந்த சமயம் பார்த்து அங்கு வந்த கிளிநொச்சி ஜமீனின் ஆட்கள் அந்த வானில் இருந்தவர்களுடன் பேரம் பேசி அப்படியே அந்த வானையும் அதிலிருந்தவர்களையும் தங்களுடைய பரப்புரைக்குத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டார்கள். முதலில் ஒழுங்குபடுத்திய கட்சிக்காரரின் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் எல்லாவற்றையும் அந்த இடத்திலேயே வெளியே தூக்கிப் போட்டுவிட்டு ஜமீனின் ஆட்களுடன் போய்விட்டார்கள் அந்தத் தொழிலாளர்களும் வான்காரரும். அப்படியென்றால் பேரம் எப்படிப் படிந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## இரவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட இந்த ஊழல்வாதிகள் இந்த தேர்தலையும் ஒரு ஜனநாயக ரீதியில் நடாத்த விடாமல் மக்கள் மத்தியில் சென்று அவர்களை மீண்டும் அவர்களை மிரட்டி வாக்குகளைப் பெறுகின்ற ஒரு பயங்கரமான நிலைப்பாடு நடந்தேறுகின்றது.

குறிப்பாக ஜெயந்திபுரத்தில் கருணா பிள்ளையான் கட்சி ஆதரவாளர்களுக்குள்ளே இடம்பெற்ற மோதலில் 3 பேர் வைத்தியசாலையில் 6 பேர் கைது இதேபோன்று என்னுடைய என்னுடைய சொந்தஊரான படுவான்கரை பிரதேசத்திலுள்ள முனைக்காடு பிரதேசத்தில் நான் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கேயும் பிள்ளையானின் அடியாள் ஒருவர் வந்து பிள்ளையான் வீதி அமைத்துள்ளார் அவருக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தெரிவித்து எனக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

இவ்வாறு கடந்தகாலத்தில் ஆயுத முனையில் அச்சுறுத்தல் செய்த மாதிரி இந்த தேர்தலில் குழுக்களாக சேர்ந்து அச்சுறுத்தலை மேற்கொண்டு ஒரு ஜனநாயக வழியில் தேர்தலை நடாத்த விடாமல் அச்சுறுத்தல் வழியில் தங்களுக்கான வாக்குகளை பெறுவதற்கு முயற்சிக்கின்றனர்.

தமிழ் மக்களை இதுவரை ஏமாற்றி வந்துள்ள தரப்புக்களை ஒதுக்கப்போகின்றனர் என்ற நிலைப்பாட்டை அறிந்த ஒட்டுக்குழுக்கள் கிராமங்களிலே இரவுவேளைகளில் உட்புகுந்து மக்களையும் தாய்மார்களையும் மிரட்டி வாக்குகளைப் பெறுவதற்கான கூட்சமங்களில் ஈடுபடுகின்றனர். எனவே மக்கள் இந்த ஊழல் வாதிகளையும் ஒட்டுக்குழுக்ககளையும் நிராகரிக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டம் ஏற்கனவே மிக மோசமான அச்சுறுத்தலுக்கு உட்பட்ட நிலையிலே இந்த தேர்தலும் அவ்வாறான நிலை காணப்படுகின்றது எனவே தேர்தலை ஜனநாயக முறையில் நடாத்த தேர்தல் திணைக்களம், ஜனாதிபதி, தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் பெவ்ரல் அமைப்பு விளங்கிக் கொண்டு செயற்படவேண்டும்.

எனவே தேர்தலை மக்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் ஏற்கனவே இடம்பெற்ற தேர்தல் போன்று இந்த தேர்தலைக் கையாளக்கூடாது ஏன் என்றால் இந்த தீவிலே தமிழ் மக்கள் உரிமையோடு எதிர்காலத்தில் வாழக்கூடிய மாதிரி வடகிழக்கிலுள்ள தமிழர்கள் முடிவெடுக்க வேண்டும்.

கடந்த நல்லாட்சி காலத்தில் கொண்டுவரப்பட்ட ஏக்கிய இராஜ்ஜிய இடைக்கால அறிக்கை கிடைப்பிலே கிடக்கின்றது இந்த நாட்டின் ஜனாதிபதி தெளிவாகத் தெரிவித்திருந்தார் இந்த நாட்டில் வெற்றியீட்டும் தமிழர் தரப்புடன் இணைந்து தேர்தலுக்குப் பின்னராக நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்கப் போவதாக அறிவித்துள்ளார் எனவே அவர் ஒற்றையாட்சிகுள்ளே தான் இந்த தீர்வை காண்பதற்காக மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த காலங்களிலே இருந்த தமிழ் தலைமைகள் அத்தனை பேரும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை நிறைவேற்றும் முகமாக அவர்களது நடவடிக்கைகள் இருந்ததுடன் இந்திய பிரதமருக்கு 13 திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் எனக் கடிதம் எழுதியுள்ளனர்.

அந்த ஏழு கட்கிகளும் தான் இன்று பிரிந்து நின்று சங்கிலும் வீட்டிலும் கேட்கின்றனர் இந்த வடக்கு கிழக்கிலே ஒரு நேர்மையான உறுதியான தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைக் கொண்டு செல்லக் கூடிய எமது கட்சி தலைவர் கஜேந்திரகுமார் செயற்படுகின்றார் கடந்த 15 வருடமாக மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என உறுதியாக இருக்கின்றார் அப்படிப்பட்ட அவருக்கு மக்கள் திரண்டு கூடிய ஆசனங்களை வழங்கும் பட்சத்தில் தான் இந்த நடைபெறவுள்ள பெரும் ஆபத்திலிருந்து மக்களைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கும்.

வீடு சங்கில் போட்டியிடுகின்றவர்கள் இந்த ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை விரும்பி ஒத்துழைப்பார்கள் இவர்கள் இங்கே தேர்தலில் பிரிந்து நின்று கேட்டாலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக வருகின்றபோது ஜனாதிபதியுடன் இணைந்து இந்த ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை நிறைவேற்றுவதற்குச் செல்வார்கள் என்பதை மக்கள் உணரவேண்டும். எனவே கஜேந்திரகுமார் அணிக்குக் குறைந்த பட்சம் 10 ஆசனங்களை மக்கள் வழங்குகின்றபோது ஜனாதிபதியின் இந்த சதியைக் கண்டிப்பாக முறியடிப்போம் என்றார்.

## மின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த அறிவித்தல் மின்சார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையினால் 6 வீத மின்சார கட்டண திருத்தம் முன்வைக் கப்பட்டதுடன் குறித்த கட்டணத்தைவிட அதிக வீதத்தினால் கட்டணத்தை குறைக்க முடியும் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் காலம் போதாமையால் இம்முறை களுத்துறை, ஹம்பகா மாவட்டங்களில் அதை மேற்கொள்ள முடியாதிருந்தபோதிலும் இம்முறை கொழும்பு புத்தளம் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் போட்டியிடுகின்றோம்.

நான் அன்று முன்வைத்த மாற்று கொள்கை மாற்று வேலைத்திட்டத்தை அன்று சக தமிழ் கட்சிகள் எற்றிருந்தால் கடந்தகால அழிவுகளை சந்தித்திருக்க வெண்டிய நிலை எற்பட்டிருக்காது. ஆனால் இத்தனையும் நடைபெற்ற பின்னர் தற்போது எனது அந்த நிலைப்பாட்டிற்கு அவர்கள் வந்தள்ளனர்.

மாற்று வேலைத்திட்டத்தை கொள்கையை பின்பற்றியிருந்தால் காலம் கழிந்து அனைத்து தமிழ் கட்சிகளும் நாம் எதை கூறிவந்தோமோ குறிப்பாக அன்றாட பிரச்சினை அபிவிருத்தி அரசியலுரிமை என்ற நிலைப்பாட்டையே முணுமுணுக்க தொடங்கியுள்ளனர்.

அன்று நாம் சிறுவர்களாக இருந்தபோது 'சோறா சதந்தரமா' வேண்டும் என உணர்ச்சிவசப்படுத்தி பிரசாரங்களை முன்வைத்தனர். அன்று எமக்கு சோறு இருந்தமையால் சுதந்திரத்தை கையிலெடுத்து வீதிக்கு இறங்கினோம். இதன் விளைவாக சோறும் இல்லை சுதந்திரமும் இல்லை என்ற நிலை உருவானது.

எமக்கு சோறும் வேண்டும் சுதந்திரமும் வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றிருந்தால் இன்று நாம் சுய நிர்ணய உரிமையை நடைமுறையில் பெற்றிருக்கலாம் என்றே நான் எண்ணுகின்றேன்.

அன்று நாம் ஆயுதத்தை தூக்கியது சுதந்திரத்தை எட்டமுடியும் என்று நினைத்தோம்; அது தவறாகிவிட்டது. இன்று அந்த அனுபவங்கள் குறிப்பாக இரண்டு அனுபவங்கள் இருக்கின்றன.

இம்முறை மக்கள் எனக்கு அரசியல் அதிகாரத்தை தந்தால் நிச்சயம் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டமுடியும் என நம்புகின்றேன் என்றார்.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட சக்தி மாற்றத்தை நோக்கி நகரும் சக்தி அமைச்சின் வழிகாட்டலுடன், முழு இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்காகவும் 2024 ஒக்டோபர் 23ஆம் திகதி இலங்கை மின்சார சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினால் மின்சாரத் துறை மறுசீரமைப்பு பற்றிய ஆன்லைன் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

மாற்றம் என்பது ஒரு பொதுவான யதார்த்தம்; எந்தவொரு நிறுவனத்திற்கும் சரியான நேரத்தில் மாற்றங்கள் அவசியம். சேவையின் தரம் மற்றும் தரத்தை உயர்த்துவதற்கும், வாடிக்கையாளர் திருப்தியில் உயர்ந்த தரங்களைப் பேணுவதற்கும், நிறுவனத்திற்கு நியாயமான இலாபங்களை ஈட்டுவதற்கும், சமூகப் பொருளாதாரத்திற்கு உயர்ந்த வருவாயை உறுதி செய்வதற்கும், ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் எந்தவொரு நிறுவனமும் காலமுறை மதிப்பீடுகளுடன் முறையான நிறுவன சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும்.

பல தசாப்தங்களாக இலங்கை மின்சார சபைக்குள் உள்ளக சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தாததன் விளைவாக கடந்த ஆண்டு வெளிப்புற பொறிமுறைகளால் முன்மொழியப்பட்ட மறுசீரமைப்பு செயல்முறையை இலங்கை மின்சார சபை பின்பற்ற வேண்டியிருந்தது.

எவ்வாறாயினும், தற்போதைய ஜனாதிபதிக்கு கிடைக்கப்பெற்ற சமூக மாற்றத்திற்கான ஆணைக்கு அமைவாக மின்சக்தி துறையில் முறையான மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கான பெரும் சந்தர்ப்பமொன்று தோன்றியுள்ளது.

அரசுக்கு சொந்தமான மின்சாரத் துறை சொத்துக்களை தனியார்மயப்படுத்தாமல் விரிவான பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களின் ஆலோசனையின் மூலம் மின்சார சட்டத்தில் திருத்தம் மூலம் நிறுவப்பட்ட சுயாதீன அமைப்பு ஆபரேட்டர் (ISO) மற்றும் தொகுக்கப்படாத உற்பத்தி, பரிமாற்ற மற்றும் விநியோக உரிமங்களுடன் ஒரு வலுவான ஒற்றை கொள்வனவாளர் சந்தையின் கீழ் அடுத்த ஐந்து ஆண்டுகளில் பிராந்தியத்தில் குறைந்த மின்சார செலவை அடையும் அதேவேளையில், மக்களை மையமாகக் கொண்ட, சுத்தமான மற்றும் பாதுகாப்பான மின்சாரத் துறையை கட்டியெழுப்புவதற்கு இணையுமாறு பணிப்பாளர் சபை அனைவரையும் அழைக்கிறது.

எரிசக்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் எதிர்கால முன்னெடுப்புகளுக்கு அனைவரினதும் செயலூக்கமான பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்றை அமைப்பதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது என்றுள்ளது.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தத்தினை தமிழ் அரசியல் தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர். மாகாணசபைத் தேர்தலிலும் போட்டியிட்டனர். ஆனால் இந்த நாட்டில் தற்போது அமுலிலுள்ள மாகாணசபை முறைமையால் தமிழர்களுக்குரிய தீர்வை வழங்கமுடியாது என்பது அனைவருக்கும் தெரியும்.

பெரும்பான்மையினத் தலைவர்கள் எவரும் தமிழர்களுக்கான தீர்வினை தாமாக முன்வந்துதந்துவிடப்போவதில்லை என்பதும் அனைவரும் அறிந்ததே. ஆனால் தமிழர்களுக்கான தீர்வு வழங்கப்படத்தான் வேண்டுமெனசர்வதசநாடுங்கள் இலங்கைக்கு ஒருமித்து அழுத்தங்களை வழங்கினால் நிச்சயமாக தமிழர்களுக்குரிய தீர்வு கிடைக்கும்.

இந்தியா நினைத்திருந்தால் எப்போதோ தமிழர்களுக்குரிய தீர்வினைப் பெற்றுக்கொடுத்திருக்க முடியும். இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் பின்னணியில் இலங்கை அரசமைப்பில் கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தம், அதன்மூலம் இந்த நாட்டில் அதிகாரப் பகிர்வு நோக்கோடு மாகாணசபை முறைமை ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு இந்தியாவின் தலையீட்டுடன் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அற்பசொற்ப அதிகாரங்கள்கூட தற்போது மத்திய அரசால் மீளப்பெறப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

தற்போது இந்த நாட்டைப் பொறுப்பேற்றுள்ள ஜே.வி.பி. பதின்மூன்றாம் அரசமைப்பில் பொலிஸ் அதிகாரம் மற்றும், காணி அதிகாரங்களை வழங்கமுடியாது எனக் கூறுகின்றது.

அத்தோடு போர்க்குற்றம் புரிந்தவர்களுக்கான விசாரணைகள் இல்லை என்றும் கூறுகின்றனர். இவை மூன்றுமில்லாத தமிழர்களுக்கான தீர்வு எது? இந்த மூன்று விடயங்களுமில்லாது தமிழர்களுக்கான தீர்வு எதற்கு?

வடக்குக் கிழக்கை தமிழர்களின் தாயகம் என்றுகூறுகின்றோம். ஆகவே நில உரிமை என்பது மிக முக்கியமானதாகும். எமது நிலம் எமது உரிமையாகும்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு இவ்வாறான எல்லைக் கிராமங்களை பெரும்பான்மையினத்தவர்கள் அரச திணைக்களங்களின் ஒத்துழைப்புக்களுடன் அபகரிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு ஏறக்குறைய ஐந்து இலட்சத்து தொண்ணுற்றாறாயிரம். இதில் இரண்டு இலட்சத்து இருபத்திரெண்டாயிரத்து ஆறு ஏக்கர் நிலம் 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் வனவளத்திணைக்களத்திடமிருந்தது. தற்போது

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# திருகோணமலையில் மீன்பிடி தொழிலானது பல்லாயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம்

## இந்திய உயரிஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

வரலாற்று ரீதியாக இலங்கையின் மீனவ சமூகத்தின் தாயகமாக சிறந்து விளங்கும் திருகோணமலை நகரத்தில் மீன்பிடித்தல் என்பது இங்கு ஒரு தொழில் மட்டுமல்ல, ஒரு வாழ்க்கை முறையாகும், இது பழங்கால பாரம்பரியமாக செய்துவரும் இத்தொழில் மூலம் பல்லாயிரம் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை வழங்குகிறது என்று இந்திய உயரிஸ் தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இலங்கை மற்றும் இந்தியாவின் நட்புறவை மேம்படுத்தும் நோக்கில் இந்திய தூதரகத்தால் திருகோண மலையிலுள்ள 21 ஆழ்கடல் மீன்பிடி மீனவ சங்கங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு திருகோணமலை கடற்றொழி லாளர்கள் தொழிற்சங்க தலைவர் ரவிக்குமார் தலைமையில் திருகோண மலை திருக்கடலூர் மீனவர்கள் வர்த்தக சங்க கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு, பிரதம அதிதியாக இந்திய உயரிஸ்தானிகர் சந்தோஷ் ஜா கலந்து கொண்டு மீனவர்களுக்கான உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில் -

இப்பகுதி மக்களுக்கு உணவு, வருமானம் மற்றும் தேவைகளுக்கான நம்பிக்கையை கடல் அன்னை வழங்கியுள்ளது.

இலங்கைக்கு இந்தியா வழங்கிய பெரிய அபிவிருத்தி ஒத்துழைப்பு உதவிகளின் வரிசையில், இந்த நாட்டின் மீனவ சமூகத்தை ஆதரிப்பதும், ஊக்குவிப்பதும், மேம்படுத்து வதற்குமான எமது முயற்சி முக்கிய இடத்தில் உள்ளது. 2009 - 2010 ஆம் ஆண்டு உள்நாட்டு ஆயுத மோதலை அடுத்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த மீனவர்கள் உள்ளிட்ட மீனவர்களுக்கு கடந்த காலங்களில் மீன்பிடி உபகரணங்களை வழங்கிய பல நிகழ்வுகளும் இதில் அடங்கும்.





கிழக்கு மாகாணத்தின் பல்துறைசார் மானிய உதவிகளுக்கென சுமார் 2.35 பில்லியன் இலங்கை ரூபாக் களை ஒதுக்க இந்தியா உறுதியளித் துள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவ தற்கான 33 திட்டங்களுக்கான, கட்டமைப்பு திட்டங்கள் இறுதி செய்யப்பட உள்ளன. இவற்றில், 7 மீன்பிடித் திட்டங்கள் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும், மீன்பிடி உபகரணங்களை வழங்குவது மட்டுமல்லாமல், நன்னீர் அலங்கார மீன் வளர்ப்பு, கடற்பாசி கூண்டு வளர்ப்பு, திலாப்பியா குளத்து மீன் வளர்ப்பு மற்றும் பருவகால தொட்டி மேம்பாடு போன்ற கருப்பொருள்கள் உள்ளடங்கியுள்ளன.

இன்று உங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், கடின உழைப்பாளிகளான திருகோணமலை மீனவர்களுக்கு, அபிவிருத்தி உதவிப் பொதியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உதவித் தொகுதியில், படகுகளுக்கான வெளியிணைப்பு இயந்திரம், பிடித்த மீன்களை பாதுகாக்க கூடிய உறைவிக்கும் இயந்திரங்கள் மற்றும் உயிர்காப்பு அங்கிகள் ஆகியவை அடங்கும்.

இவை உங்கள் அன்றாட நடவடிக்கைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் ஆகிய இரண்டையும் மேம்படுத்த உதவும் அத்தியாவசியமான கருவிகள். ஆழமான உறைவிப்பான்கள் உங்களால் பிடிக்கப்பட்ட மீன்களை தரம்கெடாது பேணுவதை உறுதி செய்யும் அதேவேளையில், உங்கள் வருமானத்தைப் பெருக்குவதற்கும் பங்களிக்கும். கடலில் சிக்கித்தவிக்கும் அல்லது விபத்துகளை சந்திக்கும் மீனவர்களையும் மற்றும் அவர்களது படகுகளை பாதுகாப்பாக மீட்பதற்கு அதிக வலு கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் உயிர் காப்பு அங்கிகள் முக்கியமான ஆதரவை வழங்கும்.

இந்தியாவும் இலங்கையும் நமது கரையோரங்ழிகளை இணைக்கும் வரலாறு, கலாச்சாரம் மற்றும் இந்தியப் பெருங்கடலில் வேரூன்றிய ஆழமான பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன.

கடந்தவாரம், இந்தியா-இலங்கை மீன்வளத்துறையின் கூட்டுப்பணிக்குழுவின் 6வது கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. இதில் இரு தரப்பினரும் மீனவர்கள் தொடர்பான அனைத்து பிரச்சினைகளையும் விரிவாக ஆய்வு செய்தனர்.

இலங்கையில் மீன்பிடித் தொழிலின் முக்கியத்துவத்தையும், மீனவர்களாகிய நீங்கள், இயற்கையாலும், சந்தைப்படுத்துவதில் உள்ள விடயங்களாலும், நவீன உபகரணங்களை அணுகுவதன் மூலமும் எதிர்கொள்ளும் சவால்களையும் இந்தியாவில் உள்ள நாங்கள் புரிந்துகொள்கிறோம். இந்த நட்புறவு மற்றும் கூட்டாண்மையின் உணர்வில்தான் இந்தியா இலங்கைக்குத் தேவையான நேரங்களில் தொடர்ந்து துணை நின்றது. இனியும் நிற்கும். இன்றைய உதவி அந்த திசையில் பயணிப்பதற்கான மற்றொரு படியாகும்.

இந்த முயற்சி பொருளுதவி வழங்குவது மட்டுமல்ல, திருகோணமலை மீனவ சமூகத்தின் நிலையான எதிர்கால சமூகங்களை வலுப்படுத்துவதும், அதற்கான முதலீடுகளை செய்வதுமாகும்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் எங்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்புக்கு இது ஒரு சான்றாகும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தையும் உறவையும் தொடர்ந்து வலுப்படுத்துவோம். நமது பகிரப்பட்ட எதிர்காலம் செழிப்பு, அமைதி மற்றும் முன்னேற்றம் கொண்டதாக இருப்பதை உறுதிசெய்ய நமது அரசாங்கங்கள், நமது மக்கள் மற்றும் நமது சமூகங்கள் தொடர்ந்து இணைந்து செயல்படும்.

இந்த உதவி மூலம் உங்கள் வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். நீங்கள் இந்த பிராந்தியத்தின் முதுகெலும்பு. உங்கள் வெற்றி ஒட்டுமொத்த சமூகத்திற்கும் கிடைத்த வெற்றியாகும். உங்கள் வலைகள் எப்போதும் நிரம்பியிருக்கவும், கடலுக்கு செல்லும் எமது மீனவ உறவுகள் அனைவரும் பாதுகாப்பாக கரைக்குத் திரும்பவும் வேண்டி இறைவனை பிரார்த்திக்கிறேன். - என்றார். (05)

# கூட்டமைப்பில் இணையுமாறு ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுக்கு அழைப்பு

## மீண்டும் விடுத்தது புளொட்




தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமை தொடர்பிலும் ஒன்றுபடுவது தொடர்பிலும் கடந்த காலங்களிலும் நாங்கள் அனைத்து தமிழ் தேசிய கட்சிகளுடனும் பேச்சு நடத்தி இருக்கின்றோம். அந்த வகையில் நாங்கள் பல தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்துதான் தற்போது சங்கு சின்னத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் கீழ் இந்த நாடாளுமன்ற பொது தேர்தலில் போட்டியிடுகிறோம் என ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) கட்சியின் உபதலைவர் பொன்.செல்லத்துரை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிடும் த.வசந்தராஜாவை ஆதரித்து மண்டூர் பகுதியில் சனிக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் -

இன்னும் ஒரு சில கட்சிகள் எம்முடன் இணையாமல் இருக்கின்றன. அவர்களும் எதிர்காலத்தில் எம்முடன் இணைந்துகொள் வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

அந்த வகையில், அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். எமது மக்களின் ஒரே கொள்கையோடு, ஒரே தேசியத்தோடு, தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்கொண்டு செல்வதற்கு அனைவரும் கரம் கோர்க்க வேண்டும்.

எமது மக்களை இனிமேலும் நாங்கள் பிரித்து வாழுகின்ற தன்மைகள் இருக்கக்கூடாது. தேசிய கட்சிகளோடு சேர்ந்து இந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற இளைஞர்கள், யுவதிகள் இதனை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும்.

எதிர்வரும் காலங்களிலே அவர்கள் தேசிய கட்சிகளோடு சேர்கின்ற விடயங்களை விட்டுவிட்டு அவர்கள் நிச்சயமாக தமிழ் தேசியத்தோடு ஒத்துழைப்பார்கள் என நான் நம்புகின்றேன்.

தற்போது எமது தேர்தல் பரப்புரைகள், பிரசார நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன. மக்கள் எம்மை அமோகமாக வரவேற்கின்றார்கள்.

தமிழ் தேசியத்தின்பால் எமது சங்கு சின்னத்தை பலப்படுத்துவதற்கு மக்கள் திடசங்கற்பம் கொண்டுள்ளார்கள். அதற்காக வேண்டி எதிர்வரும் 14ஆம் திகதி எமக்கு வாக்களிக்க இருக்கின்றார்கள்.

எனவே, அனைத்து மக்களும் சங்கு சின்னத்துக்கு வாக்களித்து எமது வேட்பாளர் சமூக சேவையாளர் வசந்தராஜா அவர்களது இலக்கத்துக்கும் வாக்களிக்க வேண்டும் என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். - என்றார். (05)




# விசா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் இருவர் கைது

விசா இன்றி சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

கண்டி சுற்றுலா பொலிஸ் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கண்டி, பூவெலிகட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

22 வயதுடைய இத்தாலியப் பிரஜையும் 32 வயதுடைய பிரித்தானியப் பிரஜையுமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கண்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கண்டி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜேவிபி இதைச் சொல்லலாமா?

**தேர்தலில் தோல்வியடைந்தால் அந்த அரசியல்வாதிகள் வீட்டில் இருந்து ஒய்வெடுக்க வேண்டும் என்கிற கருத்து தேசிய மக்கள் சக்தியாகிய ஜேவிபியினரிடமிருந்து மீண்டும் மீண்டும் வருகின்றது. அதிலும் குறிப்பாக முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பார்த்து அவர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்துகிறார்கள்.**

**”உங்களை மக்கள் நிராகரித்து விட்டார்கள், நீங்கள் தோல்வி அடைந்து விட்டீர்கள். எனவே, வீட்டில் இருந்து ஒய்வெடுங்கள்” என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கடைசியாகச் சொல்லியிருக்கின்றார்.**

**”அரசமைப்பை எப்படி மீறுவது என்பது பற்றிதான் ரணிலிடம் கற்றுக்கொள்ளவேண்டும். தேர்தல்களை ஒத்திவைத்த அவருக்கு ஜனநாயகம் பற்றி கதைப்பதற்கு உரிமை கிடையாது. எனவே, அரசமைப்பு மற்றும் ஜனநாயகம் பற்றி எமக்கு ரணிலின் ஆலோசனை தேவையில்லை.**

**தேர்தலில் தோல்வி அடைந்தால் வீட்டில் இருக்க வேண்டும். அதைவிடுத்து மீண்டும் அரசியலுக்கு வந்து நகைச்சுவையாளராக மாற வேண்டாம்”– என்று ரில்வின் சில்வா தெரிவித்திருக்கிறார்.**

**அவர் மட்டுமில்லை அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவும்கூட இதே கருத்தைக் கூறியிருக்கிறார். தலைமை அமைச்சரான (பிரதமர்) ஹரினியும்கூட இந்தச் சாரப்படக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இவர்கள் எல்லோ–ரும் கூறுவது என்னவென்றால் தேர்தலில் தோற்று மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டால் அவர்கள் அரசியலில் இருந்தும் ஒய்வெடுத்துவிடவேண்டும் என்பதுதான்.**

**இந்தக் கருத்து உண்மையானால் ஜேவிபி இன்று ஆட்சிக்கே வந்திருக்க முடியாது. கடந்த 30 வருடங்களில் அந்தக் கட்சியும் மக்களால் நிராகரிக்கப்பட்ட தோல்வியுற்ற கட்சியாகவே இருந்து வந்திருக்கிறது. 2024க்கு முன்னர் ஒவ்வொரு அரசுத் தலைவர் தேர்தலிலும் அதனால் 5 சதவீத வாக்குகளைக்கூடப் பெறமுடிந்ததில்லை. நாடாளுமன்றத் தேர்தலிலும் முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிகாவுடன் சேர்ந்து கேட்டபோது தவிர ஜேவிபிக்கு நாடாளுமன்றத்தில் 10 ஆசனங்களுக்கு மேல் ஒருபோதும் இருந்ததில்லை. அப்படி மக்களால் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டபோதும் ஜேவிபியின் தலைவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கிவிடவில்லை. வீட்டில் இருந்ததில்லை.**

**அதற்குச் சிறந்த உதாரணமாக, தமிழர்களுக்கு நன்கு பரீட்சயமான ஜேவிபி முகங்களில் ஒன்றான சந்திரசேகரத்தையே குறிப்பிடலாம். அவர் தேர்தலில் தோற்ற பின்னர்தான் யாழ்ப்பாணத்தில் கட்சியின் அரசியல் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டார். கட்சியை யாழ்ப்பாணத்தில் வளர்ப்பதற்கான முக்கிய அரசியல் பணி அவருக்குத் தரப்பட்டிருந்தது. தோற்றுவிட்டால் வீட்டில் முடங்கிவிடவேண்டும் என்றால் சந்திரசேகரமும் வீட்டில் முடங்கித்தான் இருந்திருக்கவேண்டும். ஆனால் ஜேவிபி அப்படி நடக்கவில்லை. சந்திரசேகரத்திற்கு தேசியப் பட்டியலில் நாடாளுமன்றப் பதவியும் அதன் மூலம் அமைச்சுப் பதவியும்கூட வழங்கப்படும் என்கிற பேச்சும் இருக்கின்றது.**

**இது ஒரு உதாரணம் மட்டுமே இப்படி ஜேவிபிக்குள் பலரையும் குறிப்பிடமுடியும். பிமல் ரத்நாயக்க முதற்கொண்டு பலரையும் பெயர்சுட்டிக் குறிப்பிட முடியும். ஆனாலும் தேர்தலில் தோற்றதால் அவர்களில் யாரும் வீடுகளில் முடங்கிவிடவில்லை. அரசியலில் இருந்து ஒதுங்கிவிடவும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் தாம் தோற்றபோதும் தொடர்ந்தும் ஆற்றிய அரசியல் பணிகளின் மூலம் தமது கட்சியைச் சேர்ந்தவர் அரசுத் தலைவராக வர முன்னின்றிருக்கிறார்கள். சாதித்தும் காட்டியிருக்கிறார்கள். அடுத்த ஆளும் தரப்பை வெற்றிகரமாக அமைக்கும் நிலைக்கு கட்சியை வளர்த்துச் சென்றிருக்கிறார்கள்.**

**தங்கள் கட்சிக்குள்ளேயே இத்தகைய நிலையை வைத்துக்கொண்டு ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து ஒதுங்கி அமைதியாகிவிடவேண்டும் என்று ஜேவிபியினர் கூறுவது நியாயமற்றது. இது ரணிலைப் பார்த்து, அவரது அரசியலைப் பார்த்து அவர்கள் அதிகம் பயப்படுகிறார்கள், அவரது விமர்சனத்திற்குப் பதில் சொல்ல முடியாதவர்களாக இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தையே மக்களிடம் ஏற்படுத்துகின்றது.**

# அமெரிக்க அதிபர் தேர்தல் இன்று

ரூபன்

அமெரிக்க அதிபர் தேர்தல் வாக்குப் பதிவு இன்று. நேற்றுவரையில் தேர்தல் பரப்புரைகள் அனல் பறந்தன.

அமெரிக்க அதிபர் தேர்தல் என்பது அனைத்துலகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. ஆகவே, உலக நாடுகள் அனைத்தும் இந்த தேர்தலை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றன.

அதிபர் வேட்பாளராக, ஜனநாயகக் கட்சி சார்பில் ஆரம்பத்தில் களமிறங்கிய அதிபர் ஜோ பைடன், திடீரென விலகிக் கொள்ள, இப்போது அவரது இடத்தில் ஜனநாயகக் கட்சியின் அதிபர் பதவி வேட்பாளராக நிற்கிறார் அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸ். அவரை எதிர்த்து குடியரசுக் கட்சி வேட்பாளராகக் களத்தில் நிற்பவர் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப்.

கமலா ஹாரிஸுக்கு எதிராக டிரம்ப் களம் காண்கிறார்.

கமலா ஹாரிஸ் வெற்றிபெற்றால் அமெரிக்காவின் முதல் பெண் அதிபர் என்ற பெருமையைப் பெறுவார். கூடவே இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் அதிபர் என்ற பெருமையும் கமலாவுக்குச் சேரும்.

அமெரிக்க அதிபர் தேர்தல் முறைப்படி 50 மாகாணங்கள்+ தலைநகர் வாஷிங்டனில், எலக்ட்டோரல் எனப்படும் பிரதிநிதிகளை மக்கள் வாக்களித்துத் தேர்வு செய்கிறார்கள். மொத்தம் 538 பிரதிநிதிகள். இந்த 538 பிரதிநிதிகள் பின்னர் அதிபரைத் தேர்வு செய்வார்கள். 270க்கு மேற்பட்ட பிரதிநிதிகளின் ஆதரவைப் பெறுபவர்தான் அமெரிக்க அதிபராக முடியும்.

தற்போதுள்ள சூழலில் கமலா ஹாரிஸின் ஜனநாயகக் கட்சிக்கு 326 பிரதிநித்துவ வாக்குகளும், டிரம்ப்பின் குடியரசுக் கட்சிக்கு 219 வாக்குகளும் கிடைக்க வாய்ப்புண்டு. மீதம் 93.



அமெரிக்க அதிபர் தேர்தலில் 18.65 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். 7 கோடி பேர் ஏற்கெனவே வாக்களித்து விட்டார்கள் என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும்.

ஆம். வயதானவர்கள், தேர்தல் நாளில் வேறு வேலை காரணமாக பயணம் மேற்கொள்பவர்கள் அமெரிக்க அதிபர் தேர்தலில் முன்கூட்டியே வாக்களிக்கும் வசதி இருக்கிறது.

அந்த அடிப்படையில் 70 மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்து விட்டனர். அவர்களில் 55 விழுக்காடு பேர் பெண்கள்.

81 வயதான அமெரிக்க அதிபர் ஜோ பைடன்கூட ஏற்கெனவே வாக்களித்து விட்டார். அண்மைக் காலமாக பைடன் சற்றுத் தடுமாற்றத்தில் இருப்பதால், சொந்த கட்சியான ஜனநாயகக் கட்சிக்கே அவர் சரியாக வாக்களித்திருப்பார் என நம்புவோம்.

கடந்த 2020 அதிபர் தேர்தலில் 66.6 விழுக்காடு வாக்குகள் பதிவான நிலையில் இந்தமுறை இன்னும் அதிக விழுக்காடு வாக்குகள் பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சரி. இந்த தேர்தலில் வெற்றி வாய்ப்பு யாருக்கு?

அதிபர் ஜோ பைடன் போட்டியில் இருந்து விலகிக் கொள்வதற்கு சற்று முன்புவரை டிரம்ப்பின் கையே ஓங்கியிருந்தது. ஜோ பைடனுக்குப் பதிலாக கமலா ஹாரிஸ் களத்தில் இறங்கியவுடன் நிலைமையில் சற்று மாற்றம்.

செப்டம்பர் 11 கமலாவுக்கும், டிரம்புக்கும் இடையே நடந்த நேருக்கு நேர் விவாதத்துக்குப்பின் கமலாவின் கையே ஓங்கியது. ஆனால், இப்போது இருவருக்கும் இடையில் யாருக்கு வெற்றி யாருக்குத் தோல்வி என்று கணிக்க முடியாத அளவுக்கு இழுபறி நிலையே நீடிக்கிறது.

கமலாவுக்கு 45%, டிரம்ப்புக்கு 42% ஆதரவு இருப்பதாக அண்மையில் ராய்ட்டர்ஸ் நிறுவனம் கணித்துள்ளது. இதற்கு முந்தைய மற்றொரு அமைப்பின் கருத்துக் கணிப்பில் கமலா 48.1% டிரம்ப் 46.7%. 5.2% வாக்காளர்கள் மதில் மேல் பூனைகள்.

பெண் வாக்காளர்களைப் பொறுத்தவரை கமலா ஹாரிஸ் 11 புள்ளிகள் முன்னணியில் இருக்கிறார். ஆண் வாக்காளர்களைப் பொறுத்தவரை பத்து புள்ளிகளுடன் டிரம்ப் முன்னிலை வகிக்கிறார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் பெண் வேட்பாளர் ஒருவருடன் டிரம்ப் மோதுவது இது முதல்முறை அல்ல. 2016ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் ஹிலாரி கிளிண்டனை எதிர்த்து களம் கண்டவர்தான் டிரம்ப். அந்தத் தேர்தலில் டிரம்ப் வெற்றிபெற்று அதிபரானார்.

இந்தமுறை மற்றொரு பெண் வேட்பாளரான கமலா ஹாரிஸுக்கு எதிராக டிரம்ப் களம் காண்கிறார்.

இந்த 93 பிரதிநிதித்துவ வாக்குகளும் பென்சில்வேனியா, ஜார்ஜியா, வட கரோலினா போன்ற ஏழு மாகாணங்களில் குவிந்து கிடக்கின்றன. இந்தமுறை அதிபர் தேர்தலில் வெற்றி தோல்வியை முடிவு செய்ய இருப்பவை இந்த 7 மாநிலங்கள்தான்.

அதிலும் பென்சில்வேனியா மாகாணத்தில் 19 எலக்ட்டோரல் வாக்குகள் இருப்பதால் வெள்ளை மாளிகையின் நுழைவு சாவியாக பென்சில்வேனியா மாகாணம் கருதப்படுகிறது.

வடக்கு கரோலினா மாகாணத்தில் மொத்தம் 16 எலக்ட்டோரல் வாக்குகள் உள்ளன. 2016, 2020 தேர்தல்களில் டிரம்ப் வெற்றி பெற்ற மாகாணம் இது.

தெற்கு கரோலினா மாகாணம் ஏற்கெனவே கமலா ஹாரிஸின் செல்வாக்குள்ள மாகாணம் என்ற நிலையில், வடக்கு கரோலினா கையைவிட்டுப் போனால் டிரம்பின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படும் என்று தெரிகிறது. இதனால், டிரம்ப் தனது முழுக் கவனத்தையும் வடக்கு கரோலினா மாகாணம் மீது திருப்பியுள்ளார். தேர்தல் பரப்புரை ஓயும் வரை வடக்கு கரோலினாவில் சுற்றிச்சுழன்று டிரம்ப் பரப்புரை செய்தார்.

உலகப் பெரும் பணக்காரரான எலான் மஸ்க், ஏறத்தாழ 630 கோடி ரூபாய்களை டிரம்ப்புக்குத் தேர்தல் நன்கொடையாக வாரி வழங்கியுள்ளார். மறுபுறமாக புகழ்பெற்ற பாடகிகளான டெய்லர் ஸ்விஃப்ட், கார்டி பி போன்றவர்கள் கமலாவுக்கு ஆதரவாக உள்ளனர்.

பில்கேட்ஸ் மற்றும் கறுப்பின மக்கள், அமெரிக்கா வாழ் இந்தியர்களின் ஆதரவும் கமலாவுக்கு உள்ளது.

சரி. அமெரிக்க அதிபர் தேர்தலில் முதன்மையாக முன் வைக்கப்படும் பிரச்சினைகள் என்னென்ன? அதில் கமலா ஹாரிஸ், டொனால்ட் டிரம்ப் ஆகியோரின் கருத்து என்ன?

முதலில் கருக்கலைப்பு., கமலா கருக்கலைப்புக்கு ஆதரவாகவும், டிரம்ப் எதிராகவும் இருக்கிறார். அமெரிக்காவின் சில மாகாணங்களில் கருக்கலைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது. சில மாகாணங்களில் தடையில்லை. இதனால், கருக்கலைப்புக்காக பெண்கள் அதிக செலவு செய்து அண்டை மாகாணங்களுக்குப் போய் வர வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில், ‘பெண்களின் தேவை என்ன என்பது பெண்களுக்குத்தான் தெரியும். ஆண்கள் முடிவு செய்ய முடியாது. பெண்களை மதித்து நம்புகிற மாதிரியான நாட்டை உருவாக்குவோம்’ என்பது கமலா ஹாரிஸின் கருத்தாக இருக்கிறது.

‘அமெரிக்காவில் மருத்துவச் செலவுகள் தாறுமாறாக உயர்ந்திருக்கின்றன. மக்களின் உடல்நலத்தை வைத்து ஆதாயம் தேட முயற்சிப்பவர்களைத் தடுத்து

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# அமெரிக்க அதிபர் தேர்தல் இன்று

4ம் பக்க தொடர்ச்சி...........

நிறுத்துவோம்' என்பது கமலா ஹாரிஸின் கருத்து. 'இப்போது இருப்பதைவிட மருத்துவ செலவுகளை எல்லோருக்கும் ஏற்றபடி குறைப்போம்' என்பது டிரம்ப்பின் கருத்து.

பருவநிலைமாற்றம், சூழல் சீர்கேடுகளைப் பொறுத்தவரை அவை உண்மையான பிரச்சினைகள், அதை யாரும் மறுக்க முடியாது' என்கிறார் கமலா. 'இன்னும் 100 முதல் 500 ஆண்டுகளில் பெட்ரோல், டீசல் பயன்பாட்டை நிறுத்துவோம்' என்கிறார் டிரம்ப்.

'பொருளாதாரத்தைப் பொறுத்தவரை விலையேற்றத்தை அதிகப்படுத்தும் மிகப்பெரிய சம்பளம் உயரும். டெட்ராய்ட், மிச்சிகன் போன்ற பல்வேறு நகரங்களுக்குப் பல ஆயிரம் புதிய தொழிற்சாலைகளைக் கொண்டு வருவேன்' என்று பிரசாரம் செய்து வருகிறார் டிரம்ப்.

'கமலா ஹாரிஸ் ஒரு மார்க்சிஸ்ட், ஓர் இந்தியர்' என்பன போன்ற தனிநபர் தாக்குதல்களையும் டிரம்ப் தாராளமாக நடத்தி வருகிறார்.

'கமலா ஹாரிஸ் அதிபரானால் இஸ்ரேல் என்ற நாடே இல்லாமல் போகும். நான் அதிபராக இருந்திருந்தால் காஸா போர் நடந்திருக்காது. நான் அதிபராக இருந்தபோது ஈரான் மீது விதித்த பொருளாதார தடைகளால் ஹமாஸ், ஹிஸ்புல்லா அமைப்புகளுக்கு ஈரானால் உதவ



முடியவில்லை. நான் அதிபரானால் இஸ்ரேல் மீது யாரும் தாக்குதலே நடத்த முடியாது' என்று சவால் விடுகிறார் டிரம்ப்.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்' என்பது கமலா ஹாரிஸின் கருத்தாக உள்ளது. டிரம்ப் கார்ப்பரேட் ஆதரவாளர். ஆகவே, 'பெட்ரோல், மின்சாரம் போன்றவற்றின் கட்டணம் குறைந்தால் பொருளாதாரம் தானாக சீராகிவிடும்' என்கிறார் டிரம்ப்.

'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நடுத்தர மக்களுக்கு வரி குறைப்பு செய்வோம். 100 மில்லியன் மக்களை பயனடைவார்கள்' என்கிறார் கமலா ஹாரிஸ். 'நான் அதிபரானால் வரிவிதிப்பு விஷயத்தை இன்னும் சிறப்பாகக் கையாளுவேன்' என்கிறார் டிரம்ப்.

'வேலை வாய்ப்பைப் பொறுத்தவரை 50 ஆயிரம் வேலை வாய்ப்புகள் ஜோ பைடன், கமலா ஹாரிஸ் ஆட்சியில் பறிபோய் விட்டன. பணவீக்கம் 21 விழுக்காட்டில் இருந்து இப்போது 80 விழுக்காடு வரை அதிகரித்து விட்டது. நான் அதிபராக பதவிக்கு வந்தால் புதிய அமெரிக்காவைப் படைப்பேன். அமெரிக்காவைக் காப்பாற்றுவேன். வரிகள், விலைகளைக் குறைப்பேன்.

அதுபோல உக்ரைன்-ரஷியப் போரில், 'ரஷியாவின் படையெடுப்பு பன்னாட்டு சட்டங்களுக்கு எதிரானது' என்பது கமலாவின் கருத்தாக இருக்கிறது. 78 வயதான டிரம்ப்போ, 'நான் அதிபரானால் 24 மணி நேரத்தில் உக்ரைன்- ரஷிய போர் முடிவுக்கு வரும். மூன்றாம் உலகப்போர் வராமல் தடுப்பேன்' என்று எகிறி வருகிறார்.

அடுத்த அமெரிக்க அதிபர் யார்? இன்று வாக்களிப்பு முடிந்ததும் சுடச்சுட வாக்குகள் எண்ணப்பட உள்ளன. ஹாரிஸ் - டிரம்ப் இடையே வாக்கு வித்தியாசம் போகிற போக்கைப் பொருத்து சில மணி நேரங்களிலேயோ அல்லது சில நாள்களிலோ அமெரிக்காவின் அறுபதாவது அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று, 47 ஆவது அதிபராகப் போவது யார் என்பது தெரிந்துவிடும்!

அதுவரை பரபரப்புதான்.

# பிரதமர் ஹரிணி அமரசூரியவின் நடவடிக்கையை கண்டிக்கிறோம்

## நிமல்கா பெர்னாண்டோ காட்டம்



அரச நிர்வாகம் தொடர்பில் எந்த அனுபவமும் இல்லாத பிரதமர் ஹரிணி, சிரேஷ்ட அரசியல் தலைவரான ரணில் விக்ரமசிங்க சொல்லவந்த விடயத்தை புரிந்துகொள்ளாமல் அவரை விமர்சித்துவருவதைவன்மையாகக் கண்டிக்கிறோம்.

அரச நிர்வாக நடைமுறை தொடர்பில் அவருக்கு ரணில் விக்ரமசிங்கவிடம் கற்றுக்கொள்ள முடியாது என்றால் ஜனாதிபதி அநுரகுமாரவிடமாவது கற்றுக் கொண்டுபதிலளிக்க வேண்டும் என புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணி தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில் -

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவுடன் அடுத்த வருடத்திற்கான வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்து அதன் மூலம் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதற்கான அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டிருந்தது. அமைச்சரவை அனுமதித்த விடயத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளரின் பொறுப்பாகும். அதுதான் அரச நிர்வாக நடைமுறையாகும்.

அவர் ஒரு படித்த ஒருவர் என நாங்கள் அவர் தொடர்பில் சந்தோசப்பட்டபோதும், நாட்டின் சிரேஷ்ட அரசியல் தலைவர், இந்நாட்டில் பல தடவைகள் பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவை அவர் மோசமான முறையில் விமர்சித்து வருவதை காணும் போது அவர் தொடர்பில் இருந்து வந்த நல்லெண்ணம் இல்லாமல் போயிருக்கிறது. அவரது அகங்காரத் தையே இது எடுத்துக்காட்டுகிறது.

நாட்டின் அரசியல் யாப்பு தொடர்பில் அவருக்கு போதிய அறிவு இல்லாததாலே அமைச்சரவையின் தீர்மானம் குறித்து அவர் பொய் குற்றச்சாட்டு தெரிவித்து வந்தார்.

அதனாலே அரசியல் யாப்பு தொடர்பில் கற்றுக்கொடுப்பதற்கு தயார் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார். பிரதமருக்கு ரணில் விக்ரமசிங்கவிடம் கற்றுக்கொள்ள தேவையில்லை என்றால், அவர்களின் கட்சியில் அரச நிர்வாகம் தொடர்பில் கொஞ்சமேனும் அனுபவமுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரிடமாவது கேட்டறிந்து பதிலளித்திருக்க வேண்டும்.

நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என தெரிவித்து வரும் பிரதமர், இவ்வாறு மோசமான முறையில் செயற்படுவது, அவர்களின் கட்சியின் உண்மையான சுயரூபத்தையே எடுத்துக்காட்டுகிறது. எந்த அரசியல் அனுபவம் இல்லாத பிரதமர் ஹரிணி, சிரேஷ்ட அரசியல் தலைவரை விமர்சிப்பதை நாங்கள் கண்டிக்கிறோம்.



ஆனால் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ரணில் விக்ரமசிங்க தெரிவித்த விடயங்கள் பொய் எனவும் அமைச்சரவையின் தீர்மானத்தை மறுப்பதாகவும் தெரிவித்து பிரதமர் ஹரிணி அமரசூரிய ரணில் விக்ரமசிங்கவை விமர்சித்து வருகிறார்.

பிரதமர் ஹரிணிக்கு அரசியல் அனுபவம் இல்லை. அரச நிர்வாக நடைமுறைகள் தெரியாது. அவர் தேசிய பட்டியல் ஊடாக பாராளு மன்றம் வந்தவர்.

அத்துடன் வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு மேற்கொள்வதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிக்கிறார். ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் எந்த ஆலோசனையும் இல்லாமல் அதனை செய்ய முடியாது. அவ்வாறு சம்பள அதிகரிப்பு செய்வதாக இருந்தால் உதய செனவிரத்ன குழுவின் பரிந்துரைக்கமைய மேற்கொள்ள வேண்டும். - என்றார். (05)

# புதிய நாடாளுமன்றத்துக்காவது அனுபவமானோரை அனுப்புங்கள்

## எரான் விக்கிரமரத்ன கோரிக்கை

இளைஞர், யுவதிகள் பெரும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர். ஆனால், அவர்களது எதிர்பார்ப்புக்கள் சிதறடிக்கப்பட்டுள்ளன. எனவே, புதிய நாடாளுமன்றத்துக்காவது அனுபவம் மிக்கவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கடந்த தேர்தல்களில் கொலை குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களைக் கூட மக்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்திருந்தனர். எனவே, இம்முறை அவ்வாறான தவறான தெரிவுகளுக்குச் செல்வதை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இளைஞர், யுவதிகள் மாற்றம் வேண்டும் என சிந்திக்கின்றனர். அதற்கமைய பாரிய எதிர்பார்ப்புக்களுடனேயே அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்திருந்தனர். ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கள் தற்போது இழக்கப்பட்டுள்ளன. எதிர்கால சந்ததியினரின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்கு அனுபவமும் கல்வியறிவும் உள்ளவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட வேண்டும்.



அரச ஊழியர்களுக்கு சந்தைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கப்படும்போது மூளைசாலிகள் வெளியேற்றம் நடக்காது. அரச ஊழியர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவர். இது குறித்து ஜனாதிபதியும் அரசாங்கமும் கவனம் செலுத்துவது சிறந்தாகும்.

பராட்டே சட்டத்தை டிசெம்பர் 15 வரை இடைநிறுத்துவது தொடர்பான தீர்மானத்தை சமகால பொருளாதார நிலைமைகளை கருத்திற் கொண்டு மேலும் நீடிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதியிடமும் நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கிறது.

நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகர்களுக்கும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்துக்கும் வளர்ச்சிக்கும் இது பயனளிக்கும். - என்றார். (05)

# பாதுகாப்பு அச்சுறுத்தல் மதிப்பீடுகள் இன்றி வடக்கில் ராணுவமுகாம்களை நீக்கமுடியாது

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பில் பாதுகாப்பு அச்சுறுத்தல் மதிப்பீடுகளை மேற்கொள்ளாமல் தீர்மானிக்க முடியாது. அதற்குரிய வழிமுறைகளைப் பின்பற்றி அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்திய பின்னரே இது குறித்த இறுதி தீர்மானத்தை எடுக்க முடியும் என பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் கேர்ணல் நளின் ஹேரத் தெரிவித்தார்.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர்மாநாட்டின்போது, வடக்கிலுள்ள முகாம்களை அகற்றுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்த கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா? என கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர்மேலும்தெரிவிக்கையில்-

முகாம்களை அகற்றுவதாயின் அதற்கென வழிமுறையொன்று காணப்படுகிறது. அதற்கமைய முதலில் அச்சுறுத்தல் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அச்சுறுத்தல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னரே இறுதி தீர்மானம் எடுக்கப்படும். இதன்போது அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும்.

இவ்வாறு உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் காணப்பட்ட யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் வசாவிளான் மத்திய கல்லூரியிலிருந்து அச்சுவேலி - தோலகட்டி சந்தி வரையிலான வீதி சுமார் தசாப்தங்களின் பின்னர் மக்கள் போக்குவரத்துக்காக கடந்த முதலாம் திகதி முதல் திறக்கப்பட்டது. பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த மதிப்பீட்டின் பின்னரே அந்த வீதியைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த வகையிலேயே முகாம்களைநீக்குவதற்கானநடவடிக்கைகளும் முறையான வழிமுறையைப்பின்பற்றி எடுக்கப்படும். பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் மிகுந்த கரிசனையுடன் முப்படையும் பொலிஸாரும் செயற்பட்டு வருகின்றனர் என்றார்.

இது தொடர்பில் இராணுப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் கே.ஏ.என்.ரசிக குமார தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்பு சேவை தலைமையகத்தால் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல் மீளாய்வு அறிக்கைக்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கமையவே இந்த வீதி திறக்கப்பட்டது.

இந்த வீதி அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச்சென்றதால்மூடப்பட்டிருந்தது. தற்போது வீதி திறக்கப்பட்டுள்ளதே தவிர, அதியுயர் பாதுகாப்பு வலயம் குறைக்கப்படவில்லை. எனவே வீதிக்கு வெளியில் செல்ல எவருக்கும் அனுமதி இல்லை. அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. - என்றார்.(05)

# போலி நாணயத்தாள்களுடன் கம்பஹாவில் ஒருவர் கைது

கம்பஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மினுவாங்கொடை வீதியில் போலி நாணயத்தாள்களுடன் சந்தேக நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளதாக கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நிட்டம்புவ பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 25 மற்றும் போலி வெளிநாட்டு நாணயத்தாள்கள் 90 என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள்



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாயின.

இம்மாதம் 27ஆம் திகதி மாவீரர் தினம் நினைவுகூரப்படவுள்ள நிலையில், மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவினரால் இந்த சிரமதானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஞாயிற்றுக்கிரலா ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர் தூவி, சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டு, அதன் பின்னரே சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.(05)

# ஆஸியில் வேலை வாய்ப்பு தருவதாக கூறி பண மோசடி செய்தவர் கைது

ஆஸ்திரேலியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 10 லட்சம் ரூபா மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என மொரட்டுவை பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் வசிக்கும் 64 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பொலிஸ் அதிகாரி மீது வாள்வெட்டுத் தாக்கு

## ஒருவர் கைது

பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த முறைப்பாடு ஒன்று தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவரை வாளால் வெட்டி காயப்படுத்தியதாக கூறப்படும் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை எலுவில பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை தெற்கு பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் பணிபுரியும் பொலிஸ் அதிகாரி ஒருவரே காயமடைந்துள்ளார்.

காயமடைந்த பொலிஸ் அதிகாரி பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் வாளும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# மலையக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற அநுர முன்வரவேண்டும்

## திகாம்பரம் கோரிக்கை

அனுர குமார திசாநாயக்க எதிர்க்கட்சியில் இருந்த போது மலையக மக்கள் மீது மிகவும் அன்போடும் அக்கறையோடும் கருத்துகளை முன்வைத்து வந்தார். இப்போது அவர் ஜனாதிபதியாக அதிகாரத்தில் உள்ளதால் மலையக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

'மலையக 200 - திகாம்பரம் 20' நாடாளுமன்ற உரைகள் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை ஹற்றன் டிகே.டபிள்யூகலாசாரமண்டபத்தில்நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தவர், மேலும் கூறுகையில் -

எனது அரசியல் வாழ்க்கைக்கு 20 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு இந்த நூல் வெளியிடப்படுகிறது.

வெறுமனே விளம்பரத்துக்காக என்று இல்லாமல் எனது உண்மையான சேவை மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதே நோக்கமாகும்.

6 வருடங்கள் மாகாண சபையிலும் 14 வருடங்கள் நாடாளுமன்றத்திலும் இருந்துள்ளேன். பிரதியமைச்சராக, கெபினட் அமைச்சராக இருந்ததோடு, நல்லாட்சி அரசாங்கத்தில் மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சராக பதவியேற்று தலா ஏழு பேர்ச் காணியில் தனி வீட்டுத் திட்டத்தையும் இந்திய வீடமைப்புத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்திக் காட்டினேன்.

நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகள், செயலகங்களை அதிகரித்ததோடு, மலையகத்துக்கென தனியான அதிகார சபையையும் உருவாக்கினேன். பிரதேச சபையின் ஊடாக தோட்டங்களுக்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியாது என்றிருந்த பிரதேச சபை சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்ததால் அதன் சேவையை தோட்ட மக்களும் பெற்றுக்கொள்ள முடிந்தது.

நான் தோட்டத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து தோட்டத்தில் வாழ்ந்து அந்த மக்களின் கஷ்ட நஷ்டங்களை புரிந்து வைத்திருந்ததால் மலையக மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனையோடு, அரசியலில் பிரவேசித்தபோது, பல்வேறு எதிர்ப்புகளையும் சவால்களையும் சந்திக்க நேர்ந்தது.

எனினும், தோட்ட மக்களோடு வாழ்ந்த அனுபவம் இருந்த காரணத்தால் எனது அரசியல் பயணத்தை இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலிருந்து பல விடயங்கள் சொல்லப்பட்டு வந்துள்ளன. ஆனால், எமது காலத்தில் செய்து காட்டியுள்ளோம். உதாரணத்துக்கு அட்டன் புகையிரத நிலையத்தைச் சுற்றி அடிக்கப்பட்டிருந்த தகர வேலியை அகற்றி நவீன மயமாக்கி பிரதான பாதையை விஸ்தரித்து நகருக்கு புதுப் பொலிவை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

எனது அரசியல் பயணத்தில் மனோ, இராதா, உதயா ஆகியோர் உறுதுணையாக இருந்ததோடு, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்றத்தில் மிகுந்த ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளார். நடைபெறவுள்ள நாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்ட தமிழ் மக்கள் ரவூப் ஹக்கீமுக்கு ஒரு விருப்பு வாக்கை அளித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும். - என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் எம். உதயகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர். (05)




# ரோஹித பொகொல்லாகமவை இலங்கைக்கு மீள அழைத்தோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ரோஹித பொகொல்லாகம இலங்கைக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பணிபுரிந்த நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டினை தொடர்ந்தே உயர்ஸ்தானிகரை இலங்கைக்கு மீள அழைத்துள்ளதாக தேர்தல் பிரச்சார கூட்டத்தில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களை அனுமதிக்கமாட்டோம், அரசியல் நியமனங்களை அனுமதிக்கமாட்டோம், தூதுவர், உயர்ஸ்தானிகர்கள் மாத்திரமல்லாமல் தூதரக பணியாளர்கள் பலரும் மீள அழைக்கப்பட்டுள்ளனர் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அநேகமானவர்கள் அரசியல்வாதிகளின் குடும்பத்தவர்கள் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.(05)

# போதை மாத்திரைகள் வைத்திருந்த ஒருவர் கல்கிஸ்ஸையில் கைதானார்

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போதை மாத்திரைகளுடன் சந்தேக நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார் என கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 800 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனையடுத்து , சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிஸ்ஸை பொலிஸ்நிலையத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தேர்தல் நிறைவடைந்த பின்னர் வெளிநாடு செல்கிறார் ரணில்



இம்மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள

பொதுத்தேர்தல் நிறைவடைந்த பின்னர், முன்னாள்ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க, விடுமுறைக்காக தான் வெளிநாட்டுக்கு பயணிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆர்கேட் வளாகத்தில் நடைபெற்ற இளைஞர் சந்திப்பிலேயே ரணில் விக்ரமசிங்க இவ்வாறுதெரிவித்துள்ளார். (05)

## மக்கள்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் ஏக்கர் நிலம் வனவளத்திணைக்களத்திடம் இருக்கின்றது.

எமது தமிழ் மக்களுடைய நிலங்கள் தற்போது எவ்வாறு ஆக்கிரமிக்கப்படுகின்றது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். இது வனவளத் திணைக்களதின் அபகரிப்பு மாத்திரமாகும். இதேபோல வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், பாதுகாப்புப் பிரிவு என்று பலதும் ஆக்கிரமித்துள்ளன. எமது முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பொதுமக்களுக்கு ஒரு படையினர் என்ற வீதத்தில் இருக்கின்றார்கள்.

67ஆயிரம் படையினர் இங்கு இருப்பதாக புள்ளிவிவரங்கள்சுட்டிக்காட்டுகின்றன. ஆகவே எமக்கு நிலமில்லை எனில் எமக்கு எதுவுமே இல்லை. இவ்வாறான ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகவே நாம் மக்களோடு இணைந்து தொடர்ந்து போராடிவருகின்றோம்.

நாம்மேற்கொண்டஎதிர்ப்புப்போராட்டங்கள் மூலம் நாம் எமது நிலத்தை ஓரளவேனும் தக்கவைக்கமுடிந்துள்ளது. ஒருகாலத்தில்எமது நிலத்தைக்காத்தவர்கள்இன்றுஎம்மிடமில்லை. அவர்கள் மௌனிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு எமது நிலத்தைக் காத்தவர்கள் மௌனிக்கப்பட்ட பிற்பாடு எமது நிலங்கள் மிக வேகமாக அபகரிக்கப்படுகின்றது. இவ்வாறு எமது நிலங்களையும், எமது மக்களையும் காத்துநின்றவிடுதலைப்புலிகளைமௌனிக்கச் செய்தததைப்போல தமிழரசுக்கட்சியையும் வீட்டையும் உடைத்துவிட்டால் தாம் நினைப்பதைப்போலஎதையும்செய்துவிடலாம் என இலங்கை ஆளும்தரப்பு எண்ணுகின்றது.

ஆனால் எமது தமிழ் மக்கள் இன்னும் வீட்டுச் சின்னத்தை மறக்கவில்லை. மக்களிடம் நாம் சென்று நேரடியாகப் பேசும்போது வீட்டுச்சின்னம் என்ற நிலையில் மாறாதிருப்பது எமக்கு மகிழ்வைத் தருகின்றது. வீட்டுச் சின்னம்தான் தமிழர்களின் சின்னமாகும். ஆகவே வீட்டுச்சின்னத்திற்கு தமிழர்கள் அனைவரும்ஒருமித்துவாக்களித்தால்வன்னித் தேர்தல் தொகுதியில் வீட்டுச்சின்னத்தில் ஐந்து ஆசனங்களைப் பெறமுடியும் - என்றார்.

## பாடசாலைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கானபுலமைப்பரிசில்வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பாடசாலை மாணவர்களுக்கான உத்தியோகபூர்வ சீருடையில், கடந்த வருடம் நூற்றுக்கு 70 வீதத்தையும் இந்தவருடம் 80சதவீதத்தையும் சீனா நன்கொடையாக வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, அடுத்த வருடம் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான 100 சதவீத சீருடைகளையும் வழங்குவதற்கு தமது அரசு தயாராக இருப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

## செல்வம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் செயற்பட்டும் வந்திருக்கின்றோம்.

இருப்பினும் எம்மையும், எமது மண்ணையும், எமது மக்களையும் தவறாகச் சித்தரித்தும், இரட்டாந்தரப்பாக பார்க்கும் நிலைமையை இட்டு சில விடயங்களை தெளிவு படுத்துவதற்கு முனைகின்றோம்.

தமது இரண்டாம்தரப்பு உறுப்பினர்களை களமிறக்கி அதன்மூலமாக சூட்சுமமாக மீண்டும் வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கும் தலைவர்கள், அதற்கு மேலதிகமாக என்னையும், கோடரிச் சின்னத்தையும் தரம்தாழ்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தலைமைத்துவம் சம்பந்தமாக எனது நான் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளித்துள்ள தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் சுமந்திரன் தமது கட்சியின் வேட்பாளர்களுக்கும், எமில்காந்தனுக்கும் இடையிலான பிரச்சினைக்குத் தான் இறங்கிவந்து பதிலளிக்க வேண்டிய தேவை இல்லை என்று கூறியிருக்கின்றார்.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்துக்காக நானும், நாமாக பணியாற்றியுள்ளோம். அவ்வாறு உருவாக்கப்பட்ட கட்டமைப்பின் அரசியல் பலத்தைப் பயன்படுத்தி திருட்டதனமாக தேசியப்பட்டில் ஊடாக வருகை தந்தவர்தான் சுமந்திரன்.

அவருக்கு வன்னி மக்கள் இரத்துமும் சதையுமாக உழைத்தமை தொடர்பில் எதுவும் தெரிந்திருக்கப் போவதில்லை. அத்துடன் சுமந்திரன் இறங்கிவந்துபதிலளிக்க முடியாதள அளவுக்கு வன்னி மக்கள் இரண்டாம் தரப்பிரஜைகள் இல்லை என்பதையும்கூட்டமைப்புஉருவாக்கத்தினை பத்திரிகைகளில் படித்தும், யாரும் கூறக் கேள்விப்பட்ட உங்களுக்கு வன்னி மக்களின் அர்ப்பணிப்பு பற்றி அறிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதையும் அவருக்கு கூறிவைப்பதற்கு விரும்புகின்றேன்.

அடுத்து, செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் என்னையும், எமது கோடரிச்சின்னத்தையும் செல்லுமிடங்கள் எல்லாம் விமர்சனம் செய்வதாக தகவல்கள் உள்ளன.

அவர்களுக்கு ஒருவிடயத்தினைக் கூற விரும்புகின்றேன். உங்களுடைய தேர்தல் அரசியல்பிரவேசத்தினைஆரம்பத்தில்இருந்து அறிந்தவன் என்கிற அடிப்படையில் பதிலுக்கு நானும் சில விடயங்களை பகிரங்கப்படுத்த வேண்டிய சூழல் ஏற்படும்.

அதுமட்டுமன்றிகடந்தஜனாதிபதிதேர்தலில் செல்வம்அடைக்கலநாதனுக்குஜனாதிபதியை ஆதரிப்பதற்கு பணம்வங்கப்பட்டதாக சிவசக்தி ஆனந்தன் கூறினார்.

அவரது கூற்றுப்படி பணம் வழங்கப்பட்டமைக்கான ஆதரங்கள் வெளியிடப்பட்டதா? செல்வம்அடைக்கலநாதன் பணத்தை வாங்கவில்லை என்பதற்கான ஆதாரங்களை வெளியிட்டார? அவற்றை வெளியிடுவதற்கு இருவரும் தயராக இருக்கின்றார்களா? என்று சவால் விடுத்தார்.

## பெற்றோல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தால் எரிபொருள் அரசியல் தேவையின் அடிப்படையில்விலைநிர்ணயம்செய்யப்படும். தேர்தல் வரும்போது விலை குறைக்கப்பட்டு மீண்டும் மாறுகிறது. இலங்கை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் அரசவங்கிகளில் 3பில்லியன்வரைகடன்களைவைத்திருந்தது. அதற்குக் காரணம் இறக்குமதி செய்யப்பட்ட விலையை விட குறைந்த விலைக்கு விற்கப்பட்டது.

இந்த விலை சூத்திரம் சரியாக செயற்படுத்தப்பட்டபின்னர், கடந்த ஆண்டு120 பில்லியன் இலாபம் என்று நினைக்கிறேன். இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு 27 பில்லியன் இலாபம் கிடைத்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மட்டும் இந்த எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோகத்தைமேற்கொள்வதுசாத்தியமற்றது என்று கருத்தப்பட்ட காரணத்தால் வேறு நிறுவனங்களும்பெற்றோலியச்சந்தைக்குள் அனுமதிக்கப்பட்டன.

தற்போது எமக்கு உள்ள பிரச்சினை, எம்மால் சுதந்திரமாகச் செயற்பட முடியாது. தற்போது, சந்தையில் மற்ற நிறுவனங்களும் உள்ளன. அவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி, 2022 முதல், இதே விலை சூத்திரத்தை அந்த நிறுவனங்களும் பயன்படுத்துகின்றன என்றார்.

## லொஹானின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது மனைவியையும் விளக்கமறியலில் வைக்க நுகேகொட நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சட்டவிரோதமான முறையில் அசெம்பிள் செய்யப்பட்டகார்மிரிஹானபிரதேசத்தில்உள்ள அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டது தொடர்பானவிசாரணைகளுக்காக தொடர்பில் நீதிமன்றில் ஆஜராகுமாறு வட்ஸ்அப் ஊடாக அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இதன்படி, அவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகிய நிலையில், அவரை நவம்பர் 7 வரை விளக்கமறியலில் வைக்க நுகேகொட நீதிவான் உத்தரவிட்டார்.

## புனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்காலத்தில் ஹஜ் தொடர்பான நடவடிக்கைகளை மிகவும் வெளிப்படைத் தன்மையுடன்நடவடிக்கைகள்முன்னெடுக்கப் படவுள்ளன. தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தின் கீழ் அனைத்து மத நம்பிக்கைகளும் அனுமதிக்கப்படும், இதில் எந்த தடையும் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ இஸ்லாமிய திருமண சட்டங்களைமாற்றுவதில்ஆளும்தரப்புகவனம் செலுத்தவில்லை. சமூக வலைதளங்களில் வெளியாகும்ஒவ்வொருஅமைப்பின்கருத்தும் தேசிய மக்கள் சக்தியின் கருத்தல்ல - என்றார்.

சவூதிஅரசினால்இலங்கைக்குவருடாந்தம் வழங்கப்படும் ஹஜ் கோட்டா விநியோகம் தொடர்பில்இங்குகவனம்செலுத்தப்பட்டதுடன், 2004ஆம் ஆண்டு அமைச்சரவை அமைச்சராக இருந்தபோது முஸ்லிம் பெண்களின் பாடசாலைச் சீருடைக்கு ஹிஜாப் தைக்கத் தேவையான துணியை ஒதுக்குவது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரத்திரம்மூலம்தேவையானபணிகளைச் செய்திருந்தமையும் நினைவுகூரப்பட்டது.

இந்நிகழ்வில், மத கலாசார அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, புத்தசாசன. முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், இலங்கை ஹஜ் குழு தலைவர் இப்றாகீம் அன்சார் மற்றும் உறுப்பினர்கள், திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்கள், திணைக்கள அதிகாரிகள், அமைச்சின் அதிகாரிகள் எனப் பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## கடவுச்சீட்டுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாதத்திற்கான திகதி, நேர ஒதுக்கீடுகள் வழங்கி நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, டிசெம்பர்மாதத்திற்கானதிகதி,நேர ஒதுக்கீடுகளை இதன் மூலம் முன்பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அவசரமாக கடவுச்சீட்டை பெற வேண்டிய தேவையுடையவர்கள் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி. செய்த கொலைகளையும் விசாரிக்குமா அநுர அரசு?

## தமிழரசு வேட்பாளர் பிரகாஷ் காட்டத்துடன் கேள்வி

இறுதிக்கட்ட போரில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகள் மட்டுமன்றி அதற்கு முற்பட்ட காலத்தில் கல்விமான்கள், பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் என பலரை சிறிலங்கா இராணுவம் மற்றும் இந்திய இராணுவத்துடன் இணைந்து அரச ஒட்டுக்குழுக்;கள் எனத் தமிழ் மக்களால் அழைக்கப்பட்;டு, அவர்;கள் பயந்து நடுங்கிய தமிழ் இயக்கங்கள் படுகொலை செய்தன.

தங்களுக்கு உள்ளேயே கொலைகாரர்களை வைத்துக் கொண்டு எவ்வாறு தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு நீதி கோரி நிற்க முடியும்? எனவே புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.பி.டி.பி இயக்கங்கள் செய்த படுகொலைகளை விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டியது தமிழ் மக்கள் கடமையாகும். அதற்கு இந்த ஆயுதக் குழுக்களுக்கு மக்கள் பிரதிநிதி என்ற உயரிய பசுத்தோல் போர்க்காமல் இருப்பது தமிழ் மக்களின் இன்றைய கடமையாகும்.

-இவ்வாறுகாட்டத்துடன்தெரிவித்தார்இலங்கைத்தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான தி.பிரகாஷ்.

உடுவிலில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தொடர்ந்து பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

புளொட் இயக்கம் 2009ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் யுத்தம் மௌனிக்கும் வரை இராணுவத்தினருடன் நேரடியாக இணைந்து தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை மேற்கொண்டிருந்தனர் என்பது காலிமுகத்திடலில் நடைபெற்ற இலங்;கை இஷ்ஜுணுவத்தின் வெற்றிவிழாவில் புளொட் தலைவர் சித்தார்த்தனே பெருமையாக அதை ஒப்புக்கொண்டார்.

யாழ். நகரில் புளொட் இயக்கம் செய்த கோரக்கொலைகளில் ஒன்று கரவெட்டி கன்பொல்லை வீதியை சேர்ந்த 23 வயதுடைய இராசரத்தினம் இராஜேஸ்வரன் என்ற இளைஞரை 1999ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி கடத்தி சென்று அந்த இளைஞரை சித்திரவதை செய்து அவரின் தலையை வெட்டி யாழ். வைத்தியசாலை வீதியில் போட்ட சம்பவம் முக்கியமானதாகும்.

யாழ். நகரில் உள்ள புடைவைக் கடை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த இராஜேஸ்வரன் என்ற இளைஞர் வேலை முடிந்து கரவெட்டிக்கு சென்று கொண்டிருந்த போது காணாமல் போனார்.

அந்த இளைஞரை கடத்தி சென்ற புளொட் இயக்கத்தினர் நெல்லியடியில் உள்ள புளொட் முகாமில் வைத்து சித்திரவதை செய்தனர். இரண்டு நாள்கள் வைத்து சித்திரவதை செய்த பின் அந்த இளைஞரின் தலையை வெட்டி எடுத்து சென்று யாழ். வைத்தியசாலை வீதியில் போட்டனர். 23 ஆம் திகதி அதிகாலை உடல் இல்லாத தலை மீட்கப்பட்டது. சித்திரவதை செய்து படுகொலை செய்வதில் பிரசித்தி பெற்ற புளொட் இயக்கத்தினர் யாழ். நகர மக்களுக்கு அச்சத்தை உருவாக்கும் வகையிலேயே தலையை யாழ். நகரில் போட்டனர் என அக்காலப்பகுதியில் பலரும் பேசிக்கொண்டனர்.

பின்னர் அத்தலைக்கு உரிய உடல் புளொட் இயக்கத்தின் நெல்லியடி அலுவலக மலசல கூட குழியிலிருந்து மீட்கப்பட்டது. அது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்ட போதிலும் புளொட் இயக்கம் அரச படைகளுடன் சேர்ந்து இயங்கிய காரணத்தால் அவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

இக்கொலையின் மூலம் யாழ். நகர மக்களை அச்சத்தில் வைத்திருக்கலாம், பயமுறுத்திவைத்திருக்கலாம் என எண்ணிய புளொட் இயக்கத்திற்கு அது தோல்வியாகவே அமைந்தது. இக்கொலை உட்பட யாழ். நகரில் அக்காலப்பகுதியில் புளொட் இயக்கம் செய்த கொலைகளால் யாழ். குடாநாட்டில் புளொட் இயக்கத்திற்கு மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு எழுந்தது.

யாழ். குடாநாட்டில் புளொட் இயக்கத்தை மக்கள் வெறுத்து ஒதுக்கியதால் யாழ். குடாநாட்டை விட்டு வெளியேறி வவுனியாவில் நிலை கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அதேபோன்று வவுனியாவில் மாணிக்கதாசன், அலவாங்கு தாசன் தலைமையிலான புளொட் கொலைக்குழு கடத்தல் கப்பம் பெறுதல், பாலியல் பலாத்காரம், படுகொலை என அவர்கள் செய்த அட்டூழியங்களின் பட்டியல் மிக நீளமானவை.

அது போன்று மட்டக்களப்பில் புளொட் இயக்கம் செய்த படுகொலைகள், அட்டூழியங்கள் எண்ணில் அடங்கா.

2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் மோகன் செய்த படுகொலைகளின் பட்டியலை வடக்கு கிழக்கில் காணாமல் போனோர் பற்றி விசாரித்த நீதியரசர் பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் விவரமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் 1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5 ஆம் திகதி 158 பொதுமக்களை கடத்தி சென்று படுகொலை செய்த சம்பவத்தில் புளொட் மோகன் முக்கியமானவர் என நீதியரசர் பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு பின்னர் அப்பாவி பொதுமக்களை பிடித்து மட்டக்களப்பில் வீதிகளில் உயிருடன் ரயர் போட்டு எரித்த சம்பவங்களை தினசரி அந்தப் பிரதேச மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது. இக்கொலைகளை கப்டன் முனாசுடன் சேர்ந்து புளொட் மோகனும் ஏனைய புளொட் இயக்கத்தினருமே செய்தனர்.

இராணுவகட்டுப்பாட்டில்இல்லாதவவுணதீவு பகுதியில் மறைந்திருந்து பொதுமக்களை சுட்டுக்கொன்ற சம்பவங்களால் மக்கள் வெளியே செல்ல அச்சப்பட்டனர்.




1988ஆம் ஆண்டு புளொட் மோகன் தலைமையிலான புளொட் இயக்கத்தினர் கல்லடி பாலத்திற்கு அருகில் வைத்து வீரகேசரி மட்டக்களப்பு செய்தியாளர் ஆர்.நித்தியானந்தனை பிடித்து கழுத்தை அறுத்து விட்டு சென்றனர். நித்தியானந்தன் இறந்து விட்டார் என நினைத்தே புளொட் இயக்கத்தினர் சென்றனர். ஆனால் அவர் பொதுமக்களால் மீட்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் காப்பாற்றப்பட்டார்.

அதன் பின்னர் நித்தியானந்தன் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். 1992ஆம் ஆண்டு புளொட் மோகன் மறைந்திருந்து நித்தியானந்தனை சுட்டுக்கொன்றார்.

புளொட் இயக்கத்தின் அலுவலகம் மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியில் இருந்தது. படுவான்கரை கிராமங்களிலிருந்து மட்டக்களப்பு நகருக்கு வரும் மக்கள் புளொட் அலுவலகம் இருக்கும் வீதியால் செல்லவே அச்சம் அடைவார்கள். படுவான்கரையில் இருந்து விறகு கொண்டு வந்து விற்று விட்டு 300ரூபா பணத்துடன் சென்ற ஓர் ஏழைத்தொழிலாளியை கூட புளொட் இயக்கத்தினர் 300ரூபாவுக்காக கடத்தி கொலை செய்த சம்பவமும் உண்டு.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கனடா செல்வதற்கு அந்நாடு தடை செய்திருக்கிறது. இதற்கு காரணம் சுரேஷ் பிரேமச்சந்திரனும் அவர் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கமும் படுகொலைகளில் ஈடுபட்டதாக கனடா அரசாங்கத்திற்கு ஆதாரம் கிடைத்ததால் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு கனடா அரசாங்கம் இத்தடையை விதித்துள்ளது.

இதில் முக்கியமான சம்பவம் முரசொலி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த திருச்செல்வத்தின் மகன் அகிலன் என்ற மாணவனை சித்திரவதை செய்து கொன்றதாகும்.

அந்தக் காலப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தில் மண்டையன்குழு என்ற கொலைப்படை இயங்கி வந்தது.

யாழ்ப்பாணம், வவுனியா மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் மண்டையன் குழு இயங்கியது.

1989ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இளைஞர் ஒருவரின் வயிற்றிலிருந்து கொக்கோ கோலா போத்தல் ஒன்று சத்திரசிகிச்சை மூலம் எடுக்கப்பட்டது.

அச்செய்தி முரசொலி பத்திரிகையில் மட்டுமே வெளியாகியது. அந்த இளைஞர் சில தினங்களுக்கு முதல் சிலரால் கடத்தி செல்லப்பட்டிருந்தார் என இறுதியில் எழுதப்பட்டிருந்தது.

அந்த இளைஞரை கடத்தியவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தினர் என பின்னர் பலருக்கும் தெரியவந்தது. இதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் முரசொலி ஆசிரியர் திருச்செல்வத்தை சுட்டுக்கொல்வதற்கு திட்டமிட்டனர்.

முரசொலி பத்திரிகை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் செய்து வந்த படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்தி வந்தது.

அன்று ஈ.பி.ஆர்.எல்.எப் இற்கு யாழ்ப்பாணத்தில் தலைமை தாங்கிய சுரேஸ்பிரேமச்சந்திரன் இந்திய இராணுவத்துக்காகவும் தங்கள் மீது புலிகள் மேற்கொள்கின்ற தாக்குதலுக்காகவும் பழிக்குப் பழி வாங்குகின்ற படுகொலைகளை முன்னின்று நடத்தி வந்தார்.

புலி ஆதரவாளர்கள் புலிகளுக்கு உதவியவர்கள், புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் எனப் பலர் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்டனர். திருச்செல்வத்தையும் கடத்தி கொலை செய்வதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் திட்டமிட்டது.

எஸ்.திருச்செல்வம் அவர்களைக் கடத்துவதற்காக அவருடைய வீட்டுக்கு மண்டையன் குழுவினர் சென்ற போது திருச்செல்வம் வீட்டின் பின் பக்கத்தால் தப்பியோடிவிட்டார். அதனால் அங்கிருந்த அவரது மகன் அகிலனை மண்டையன் குழுவினர் கடத்திச் சென்றனர். திருச்செல்வம் தங்களிடம் வந்தால் மகனை விடுவிப்போம் என்று எச்சரித்துச் சென்றனர். தான் அவர்களிடம் சென்றால் கொல்லப்படுவேன் என்பதை நன்கு அறிந்திருந்த திருச்செல்வம் தான் செல்லாவிட்டால் தன் மகனைக் கொல்வார்கள் என்பதை எதிர்பார்த்திருக்கவில்லை.

இந்நிலையில் மண்டையன் குழு அகிலனை படுமோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கியது. அகிலனின் மலவாசலினூடாக சோடாப் போத்தலை செலுத்தினார்கள். அவருடைய நகங்களைப் பிடுங்கினார்கள். மறுநாள் அகிலன் பிணமாக வீதியில் வீசப்பட்டார்.

எஸ்.திருச்செல்வம் தம்பதிகளுக்கு கனடிய அரசு அரசியல் தஞ்சம் வழங்கி அவர்களை கனடாவுக்கு அழைத்தது. திருச்செல்வம் தனது மகனின் கொலை தொடர்பாக கனடிய அரசுக்கு வழங்கிய சாட்சியத்தில் சுரேஸ் பிரேமச்சந்திரனைக் குற்றம்சாட்டி இருந்தார். அதனால் சுரேஸ் பிரேமச்சந்திரனின் பெயர் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவருக்கு விசா வழங்க கனடிய அரசு மறுத்து வருகின்றது.

இந்த இயக்கங்கள் மக்களுக்கு எதிராக துப்பாக்கிகளைத் திருப்பிய சம்பவங்கள் எண்ணிலடங்கா. அரச படைகளுக்கு எவ்விதத்திலும் குறையாமல் சித்திரவதைகளிலும் படுகொலைகளிலும் இந்த இயக்கங்கள் ஈடுபட்டன. ஒருவரைக் கொல்வதற்கு எவ்வித காரணங்களும் கொடுக்கப்பட வேண்டிய தேவையே இருக்கவில்லை.

கல்லூரியின் மிகத் திறமையான மாணவனான அகிலன் படுகொலை செய்யப்படுவதற்கு சில வாரங்கள் முன்னதாக க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகி இருந்தன. அதில் அகிலன் நான்கு பாடங்களிலும் 'ஏ' பெற்று மிகத் திறமையாக சித்தியடைந்திருந்தார். தான் கல்வி கற்ற கல்லூரியின் கிரிக்கெட் குழுவின் தலைவனாகவும் அகிலன் விளங்கினான்.

மாணவன் அகிலன் திருச்செல்வனின் கொலை ஒருபோதுமே நியாயப்படுத்தப்பட முடியாத படுகொலை. தகப்பனுக்காக ஒருபோதுமே மகனைக் கடத்திப் படுகொலை செய்தது யாராகவிருந்தாலும் ஏற்றுக்கொள்ளமுடியாத படுகொலை.

அதேபோன்று மட்டக்களப்பில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கதலைவராகவும் பிரஜைகள் குழு துணைத்தலைவராகவும் இருந்த வணசிங்க மற்றும் மட்டக்களப்பு பிரஜைகள் குழுத்தலைவர் வணபிதா சந்திரா பெர்னாண்டோ ஆகியோரின் கொலைகளையும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கமே செய்தது.

வந்தாறுமூலையில் பிறந்த வணசிங்க அவர்கள் 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டம் தொடக்கம் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தில் தன்னை இணைத்து கொண்டவர்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தலைவராக இருந்த வணசிங்க, இந்திய இராணுவ காலத்தில் தமிழ் மக்களின் பாகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் முன்னின்று செயற்பட்ட முக்கிய பிரமுகர்களில் ஒருவராக விளங்கினார்.

மட்டக்களப்பு மாவட்ட பிரஜைகள் சபையின் உறுப்பினராகவும், பின்னர் அதன் துணைத்தலைவராகவும் இருந்து பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்தவர்.

அநீதியும் உரிமை மீறலும் எங்கு நடக்கிறதோ அங்கு சென்று அவற்றைத் தட்டிக்கேட்டு நியாயம் தேடும் ஒரு தலைவனாக அவர் விளங்கினார். ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் செய்த அட்டூழியங்கள் படுகொலைகளை தட்டிக்கேட்டார்.

இதனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் இவரை படுகொலை செய்ய திட்டமிட்டது. 1989ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி மட்டக்களப்பு அரசடியில் அவர் வீட்டில் இருந்த போது ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தை சேர்ந்த இருவர் அங்கு சென்றனர். அவருடன் பேச வேண்டும் என்றனர். வீட்டு முற்றத்தில் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். திடிரென ஒருவர் வணசிங்காவை சுட்டுக்கொன்று விட்டு தப்பி சென்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் மட்டக்களப்பில் புரிந்த படுகொலைகளில் வணபிதா சந்திரா பெர்னாண்டோ அடிகளாரை மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்திற்குள் வைத்து சுட்டுக்கொன்ற சம்பவம் முக்கியமானதாகும்.

1988ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் திகதி மட்டக்களப்பு புளியந்தீவில் உள்ள புனித மரியாள் தேவாலயத்திற்குள் வைத்து மட்டக்களப்பு மறைக்கோட்ட முதல்வரும் மட்டக்களப்பு பிரஜைகள் குழு தலைவருமான வண.பிதா சந்திரா பெர்னாண்டோ சுட்டுக்கொல்லப்பட்டார். இதே தேவாலயத்திற்குள் வைத்து தான் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கமும் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வண.பிதா சந்திரா, மட்டக்களப்பு பிரஜைகள் குழு தலைவராக இருந்து ஆற்றிய பணிகள் பல. ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற இயக்கங்கள் செய்யும் அட்டூழியங்களை அம்பலப்படுத்தி வந்தார்.

அவர் சுட்டுக்கொல்லப்படுவதற்கு சில வாரங்களுக்கு முதல் மட்டக்களப்பு நகரில் வைத்து சுகுணா என்ற தமிழ் இளம் பெண்ணையும் ரிபாயா என்ற முஸ்லீம் இளம் பெண்ணையும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தினர் கடத்தி சென்றனர். இவர்களை

தொடர்ச்சி மறுபக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir




# புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி. செய்த...

முன்பக்கத் தொடர்ச்சி....

வாவிக்கரை வீதியில் உள்ள அவர்களின் அலுவலகத்தில் வைத்து கூட்டாக பலரும் பாலியல் பலாத்காரம் செய்தனர். வண.பிதா சந்திரா இவர்களை மீட்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டார். இந்திய இராணுவ கட்டளை தளபதி ஒருவருடன் தொடர்பு கொண்டதன் பின் சுகுணா என்ற தமிழ் பெண் மீட்கப்பட்டார். ஆனால் ரிபாயா என்ற முஸ்லீம் பெண்ணை அவர்கள் பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்து விட்டனர்.

இந்த விடயத்தை வணபிதா சந்திரா மனித உரிமைகள் அமைப்புக்கள் மட்டத்திற்கு கொண்டு சென்றார். இதற்கு பழிவாங்குவதற்காகவே ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் வணபிதா சந்திராவைப் படுகொலை செய்தது.

அதேபோன்றுதான் 1989 ஆம் ஆண்டு பருத்தித்துறை பிரஜைகள் குழு தலைவராக இருந்த சிவானந்தசுந்தரம் அவர்களை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் சுட்டுக்கொன்றது. யாழ்ப்பாணம் அரியாலையில் கூட்டம் ஒன்றில் உரையாற்றி விட்டு பருத்தித்துறை நோக்கி சென்ற போது அவரை ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் சுட்டுக்கொன்றனர்.

அக்காலப்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்திய பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மக்களின் குரலாக ஒலித்த மக்கள் தலைவர்களை படுகொலை செய்த சம்பவங்கள் இலகுவில் மறந்து விடக் கூடியவை அல்ல. அந்த கொலைகளை புரிந்தவர்கள் அதற்கு உத்தரவிட்டவர்கள், உடந்தையாக இருந்தவர்கள் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

ஈ.பி.டி.பி. சந்திரிகா அரசு காலத்திலும் அதன்பின் மஹிந்த அரசுக் காலத்திலும் செய்த கொலைகள் ஏராளம். நாரந்தனையில் பிரசாரத்துக்காக சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது கொலைவெறித் தாக்குதல். ஊடக நிறுவனங்கள் மீது தாக்;குதல். ஊடகவியலாளர்களான நிமலராஜன், ரஜிவர்ணன் படுகொலை என்று நீண்டுகொண்டே செல்கின்றது. இவை அனைத்தும் முறையாக விசாரித்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

தற்போது அநுர அரசால் சிவராம் என்று போற்றப்பட்ட 'தராக்கி' படுகொலை விசாரனை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அதனை நாம் வரவேற்கின்றோம். சர்வதேச விசாரனையை நாம் கோருவதற்கு முன், எம்முள்ளே பசுத்தோல் போர்த்தவர்களை முதலில் களையவேண்டும். இந்தத் தேர்தலில் மக்கள் அவர்களை நிராகரிக்கவேண்டும். அப்போதுதான் சரியான நீதி கிடைக்க நாம் பாடுபடுவோம். எமது குரல்கள் நாடாளுமன்றில் ஒலிக்க நீங்கள் ஏகோபித்த ஆணையை வழங்கவேண்டும். இந்த கொலைகாரர்களை நீஙணங்கள் நிராகரிக்கவேண்டும். அப்போதுதான் நாம் அவர்களுக்கு முறையான தண்டனையை பெற்றுக்கொடுக்கமுடியும்.

மாறாக நீங்கள் அவர்களை மக்கள் பிரதிநிதியாகத் தெரிவுசெய்வீர்களானால் அவர்கள் தம்மைக் காப்பதற்காக நாடாளுமன்றில் பெரும்பாண்மைக்காக தளம்பும் அநுர அரசுடன் தம்மைக் காப்பதற்காக இலகுவில் விலைபோய்விடுவார்கள். பிறகு இவர்கள் செய்த கொலைக்கான நீதி கிடைகக்காமலே செல்லலாம். - என்றார். (05)



# போதையில் தாயையும் சகோதரியையும் கூரிய ஆயுதத்தால் தாக்கிய மகன் கைது

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹந்தபானாகல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மது போதையில் தனது தாயையும், சகோதரியையும் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியதாகக் கூறப்படும் மகன் கைது செய்யப்பட்டுள்ளார் என வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

காயமடைந்த சகோதரி பொலன்னறுவை பிரதேசத்தில் வசித்து வந்துள்ள நிலையில் வெல்லவாய, ஹந்தபானாகல பிரதேசத்தில் உள்ள தனது தாயின் வீட்டிற்குச் சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் மது போதையில் வீட்டிற்குச் சென்றுள்ள நிலையில் தனது சகோதரியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

வாக்குவாதம் எல்லை மீறியதால் கோபமடைந்த சந்தேக நபர், வீட்டிலிருந்த கூரிய ஆயுதம் ஒன்றை பயன்படுத்தி தனது சகோதரியை பலமாக தாக்கியுள்ளார்.

இதனை அவதானித்த தாய், சந்தேக நபரான தனது மகனைத் தடுக்க முயன்ற போது சந்தேக நபர் தனது தாயையும் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

பின்னர், காயமடைந்தவர்கள் வெல்லவாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் தாய் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இதனையடுத்து, சந்தேக நபரான மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## வீடொன்றில் கட்டிலுக்கடியிலிருந்து எட்டு அடி நீளமான முதலை மீட்பு



வவுனியா, பூந்தோட்டம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் கட்டிலுக்கு அடியிலிருந்து முதலை ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சம்பவத்தன்று, வீட்டிலிருந்தவர்கள் கட்டிலுக்கு அடியில் முதலை இருப்பதைக் கண்டு கூச்சலிட்டுள்ளனர்.

சத்தத்தைக் கேட்ட அயல் வீட்டார்கள், வீட்டினுள் சென்று பார்த்த போது கட்டிலுக்கு அடியில் முதலை இருப்பதைக் கண்டு உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், வனஜீவராசிகள் பாதுகாப்புதிணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் முதலையைப் பிடித்து வாகனத்தில் கொண்டு சென்று பாதுகாப்பான இடத்தில் விடுவித்துள்ளனர்.

எட்டு அடி நீளமுடைய முதலையொன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.(05)

## புலமைப் பரிசில் விடைத்தாள் திருத்தம் தாமதமாவதால் எதிர்காலத்தில் பாதிப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களைத்திருத்தும்பணிகள்தாமதமாவதால் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, கல்வித்துறை அதிகாரிகள் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் தாமதமாவதால் மாணவர்களின் பாடசாலைக் கல்வியிலும் பாதிப்பு ஏற்படும் என பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவிக்கையில் -

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் கசியப்பட்ட சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை.

எவ்வாறிருப்பினும், இது தொடர்பில் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## சட்டவிரோத மதுபானத்துடன் கம்பஹாவில் ஒருவர் கைது

கம்பஹா நகரத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேக நபரொருவர் சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என கம்பஹா பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

கம்பஹா பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கம்பஹா பிரதேசத்தில் வசிக்கும் 45 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடமிருந்து 60 லீற்றர் (80 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கம்பஹா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.11.2024இல் வெளியிடப்பெற்றது